**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©
**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 21-9-2013 | Issued : 21-9-2013

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, மார்ச் 28, 2013—தொகுதி 40—எண் 2**

**Thursday the 28th March, 2013—Volume 40—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*
**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] | **[Price Rs. 3.00**

**28–3–2013**

**உள்ளடக்கம்**


| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 205-253 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 253-254 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| அரசு அலுவலகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புதல் | 254-261 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 255, 257 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 255--261 |
| திரு. எம். ஆறுமுகம் | 259-260 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 261 |
| **4. முன்பண மானியக் கோரிக்கைகள், 2013–2014, அளித்தல்—** | 262-268 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 262 |
| **5. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 2012–2013, அளித்தல்—** | 268-277 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 268-270 |

**6. அறிவிப்புகள்—** 277,285-286, 294

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012—2013, முன்மொழிதல் (ஆ.செ.) 277

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.) 285

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2013—2014, முன்மொழிதல் (ஆ.செ.) 286

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.) 294

**7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, வாக்கெடுப்பு—** 278-285

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 278

**8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** 285-286 294-295

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 285--286

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 294-295

**9. முன்பண மானியக் கோரிக்கைகள், 2013–2014, வாக்கெடுப்பு—** 287-294

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 287

**10. அரசினர் தீர்மானம்—**

விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 295-296





**11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** 296-300

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 296-298

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 298-300

**12. வரவு–செலவுத் திட்டம், 2013–2014, பதிலுரை—** 300-332

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 300-330

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 316

திரு. க. பாலகிருஷ்ணன் 330-331

திரு. சு. குணசேகரன் 331-332

**13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 333-334

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, பங்குனி 15, திருவள்ளுவர் ஆண்டு – 2044

## 2013 மார்ச் 28, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 91, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**92—**

### புதிய பேருந்து நிலையம்

***4136—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாங்குனேரி தொகுதி, ஏர்வாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை. மேலும், இங்கிருந்து இயங்குவதற்கும், இரவு தங்கிச் செல்வதற்கும் பேருந்துகள் இல்லாத சூழலில், இப்பேரூராட்சிக்குப் பேருந்து நிலையம் அமைக்கும் சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நமது சட்டமன்றத்தில் தமிழ் ஈழம் விடிவதற்காகத் தீர்மானத்தை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) தரணி எங்கும் வாழும் தமிழர்கள் சார்பிலும், எங்களது சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சார்பிலும் நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு மிக்க நன்றி. எங்களது நாங்குனேரி தொகுதியிலுள்ள ஏர்வாடி முதல்நிலை பேரூராட்சி 25,000 மக்கள் தொகை கொண்டதாகும். மேலும் ஏர்வாடியைச் சுற்றி 50 கிராமங்கள் உள்ளன. அக்கிராமங்களிலுள்ள மக்கள் தங்கள் தேவைக்கு ஏர்வாடிக்குத்தான் வரவேண்டியுள்ளது. மேலும் திருநெல்வேலி, நாகர்கோவில் சாலையில் ஏர்வாடி அமைந்துள்ளதால் தினசரி ஏறத்தாழ 300 பேருந்துகள் ஏர்வாடி வழியாகச் சென்று வருகின்றன. இந்நிலையில் ஏர்வாடியிலுள்ள பெரியநாயகியம்மன் கோயிலுக்குச் சொந்தமாக 1,000 சென்ட் இடம் உள்ளது. அந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க நகரமன்றத்தால் தீர்மானம் போடப்பட்டுள்ளது. ஆகையால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் ஏர்வாடி நகர பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான பேருந்து நிலையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அரசுக்குச் சொந்தமான நிலம் இல்லை. அதோடுமட்டுமல்லாமல், அடுத்த 5–ஆவது கிலோமீட்டர் தூரத்தில் வள்ளியூரில் ஒரு பேருந்து நிலையம் இருக்கிறது. மேலும் அங்கிருந்து புறப்படக்கூடிய பேருந்துகள் ஏதுமில்லை. இரவு தங்குகிற பேருந்துகளும் அங்கு இல்லை. வழித்தடமாக இருக்கின்ற காரணத்தால்தான் அங்கே புதிய பேருந்து நிலையம் அமைக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல நிலம் கையகப்படுத்துகின்ற வாய்ப்பு இருக்கின்றபட்சத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

**திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட நெள்ளியாளம் நகராட்சியில் நீதிமன்றம் தொடங்க வாடகைக்குக் கட்டடம் கொடுப்பதற்கு நகரமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு வருடம் ஆகியும் அந்த இடத்தை ஒப்படைக்காமல் பொதுப் பணித் துறையும், நகராட்சி நிருவாகமும் ஒருவருக்கொருவர் அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்து வருகிறார்கள். அரசாணை வழங்கப்பட்டு ஒரு வருடம் ஆகியும் அந்த இடத்தை வாடகைக்குக் கொடுக்காமல் இருப்பதனால் நீதிமன்றம் தொடங்க முடியாமல் இருக்கிறது. நிரந்தர நீதிமன்றம் வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் நீண்டநாள்*

[2013 மார்ச் 28

கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, நகராட்சி நிருவாகத்திற்குச் சொந்தமான பழைய கட்டடத்தை நீதிமன்றம் நடத்துவதற்காகக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சம்பந்தமாக தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடுகள்) தனிக் கேள்வி போடுங்கள். (குறுக்கீடுகள்) சரி, அதோடு கேள்வியை முடியுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்த இடத்திலும் கேள்வி கேட்பதற்குரிய வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்போது கேட்டிருக்கிறார். ஒரு துறையிலே இருக்கின்ற இடம் மற்றொரு துறைக்குத் தேவைப்படுகின்றபோது, அந்தத் துறையினுடைய தேவையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டுதான் அந்தத் துறை அந்த இடத்தை மற்ற துறைக்குக் கொடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் நகராட்சிக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், நகராட்சிக்கு அது தேவை என்றபட்சத்தில், அதைக் கொடுக்க இயலாது. இப்பொழுது நீதிமன்றம் தொடங்க வாடகைக்கு கட்டடம் தேவை என்ற பட்சத்தில், வருவாய்த் துறையிடம் எடுத்துச் சொல்லி, வேறு ஒரு இடத்தை ஆய்வு செய்து, அங்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராமநாதபுரம் தொகுதியிலே மண்டபம் பேரூராட்சி இருக்கின்றது. அதிக மக்கள் தொகையும், போக்குவரத்தும் நிறைந்த பேரூராட்சி, மண்டபம் பேரூராட்சி. அங்கு ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் அரசுக்குச் சொந்தமான நிலம் ஏதாவது இருக்கும்பட்சத்தில் அவரது கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கலாம் அல்லது தனியார் நிலங்களைக் கையகப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்குமானால் அதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதியிலே பேருந்து நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு நிலம் கையகப்படுத்துவது சிரமமாக இருக்கும் என்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இதற்கு முயற்சி எடுத்துக்கொண்டால், அரசும் அவருக்கு உறுதுணையாக இருந்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம் பேருந்து நிலையப் பணிகள் பல ஆண்டுகளாக, மிகவும் மெதுவாக நடந்து கொண்டிருக்கின்றது. கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, 31-3-2012–க்குள் பணிகள் நிறைவுபெற்று பேருந்து நிலையம் திறக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இந்த ஆண்டு மார்ச் மாதமும் வந்துவிட்டது. எனவே, விரைவில் பணிகளை முடித்து, பேருந்து நிலையத்தைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை ஏற்கெனவே கேட்டிருக்கிறார். சுற்றுச்சுவர்கூட

[2013 மார்ச் 28

கட்டப்படாமல் இருக்கிறதென்று சொன்னார். ஆனால், சுற்றுச் சுவர் கட்டிக்கொண்டிருப்பதை அறியாமலேயே அந்தக் கேள்வியை கடந்த முறை கேட்டிருக்கிறார். இந்த முறை எந்த நிலையில் பார்த்துக் கேட்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. ஓரளவுக்கு பணிகள் முடிந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் பேரூராட்சியில் மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பார்க்கின்றபோது பேருந்து நிலையம் மிகவும் சிறியதாக இருக்கின்றது. அருகில் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தமாக ஐந்து ஏக்கர் நிலம் பயனற்ற நிலையில் உள்ளது. அந்த நிலத்தில் இந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றம் அமைக்க இடம் தேவை என்று கேட்டிருக்கிறார். அதேபோலத்தான் பேருந்து நிலையத்திற்கு கால்நடைத் துறையிலே இருக்கின்ற நிலம் கையகப்படுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார். அந்த இடம் ஏற்கெனவே ஒரு துறைக்கு ஒதுக்கப்பட்டு, அந்தத் துறையிலே பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேவையின் அடிப்படையில், இடம் கிடைக்கின்றபட்சத்தில் முயற்சி செய்யலாம். கிடைக்கவில்லையென்று சொன்னால், இருக்கின்ற இடத்தையே மேம்படுத்துவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அந்தப் பேருந்து நிலையம் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியிலுள்ள சேடப்பட்டியைச் சுற்றி கிட்டத்தட்ட 30 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. ஒன்றிய அலுவலகம் அங்குதான் இருக்கிறது. அரசு நிலமும் இருக்கின்றது. ஆகவே, சேடப்பட்டியில் பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுவட்டாரங்களில் 30 கிராமங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணன் அவர்களும் சுற்று வட்டாரத்தில் 50 கிராமங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், சுற்றுவட்டாரத்தில் அதிக கிராமங்கள் இருந்தாலுங்கூட, அந்தப் பகுதியின் போக்குவரத்து நெரிசலைப் பொறுத்தும், அந்த இடம் பேருந்துகள் புறப்படும் இடமாக இருக்க வேண்டும் அல்லது அந்த இடத்திலேயே பேருந்து நிறுத்தம் இருக்கும்பட்சத்தில் அங்கு அவசியம் பேருந்து நிலையம் தேவைப்படுகிறது. அவ்வாறு இல்லாதபட்சத்தில், இதுபோன்று பேருந்து நிலையம் இல்லாமலேயே, நிறைய ஊர்களில் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அதன் முக்கியத்துவத்தைக் கருதி, அங்கு பேருந்து நிலையம் தேவைப்படும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

*[2013 மார்ச் 28*

**திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய கள்ளக்குறிச்சி தொகுதியில், கள்ளக்குறிச்சி நகராட்சியில் 1980 ஆம் ஆண்டு நம்முடைய முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் 25 பேருந்துகள் நிற்கக்கூடிய, அதே சமயத்தில் 250 பேருந்துகள் வந்து செல்லக்கூடிய அளவிற்கு வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்தார்கள். தற்போது 1,000 பேருந்துகளுக்கு மேல் அங்கு வந்து செல்கின்றன. இட நெருக்கடியால் மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே, கள்ளக்குறிச்சியில் புறநகர் பேருந்து நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அந்தப் பேருந்து நிலையத்தின் அருகில் இடம் இருக்கின்றபட்சத்தில், அந்த நிலத்தைக் கையகப்படுத்தினால் சிறப்பாக இருக்கும். அவ்வாறு இல்லாதபட்சத்தில், நகருக்கு வெளியே பேருந்து நிலையம் வேண்டுமென்று சொன்னால், தனியாருக்குச் சொந்தமான நிலம் இருந்தால் அதை விலை கொடுத்து வாங்கவேண்டி இருக்கும். அரசு நிலம் இருக்கும்பட்சத்தில் அதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பேருந்து நிலையம் என்பது காமராஜர் அவர்களுடைய நினைவாக இயங்கி வருகிறது. அவரைப்போலவே மிகவும் எளிமையாக இருக்கிறது. அதில் வெயிலுக்கான நிழற்குடை மற்றும் குடிநீர் வசதிகூட இல்லாத நிலை உள்ளது. ஏற்கெனவே அங்கு ஒரு புறநகர் பேருந்து நிலையம் வேண்டுமென்று நான் சட்டமன்றத்தில் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து மாவட்ட*



*2013 மார்ச் 28]*

*ஆட்சித் தலைவரிடம் பலமுறை கேட்டும்கூட, அதற்கான முயற்சியை எடுக்காமல் இருக்கிறார். அதனால் மீண்டும் மாண்மிகு அமைச்சர் அவர்கள் அந்த மாவட்ட நிருவாகத்தின் கவனத்திற்குக் கொண்டுசென்று புறநகர் பேருந்து நிலையம் ஒன்றை அங்கே உருவாக்கித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் பேருந்து நிலையத்தை ஒரு தேசியத் தலைவரோடு ஒப்பிட்டு இங்கே கருத்தைச் சொல்லியிருக்கிறார். அந்தப் பேருந்து நிலையம் பழமையானது. ஆனால், பெருந்தலைவர் காமராஜருக்கு என்ன பாரம்பரியம் இருக்கிறதோ அதே அளவிற்கு அந்தப் பேருந்து நிலையத்திற்கும் பாரம்பரியம் இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்து நிலையம் எளிமையாக இருக்கிறது என்று சொன்னார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஏராளமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்து நிலையம் நிறைய பேர் வந்து செல்லக்கூடிய இடம் என்பதால் ஏற்கெனவே குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அது போதாதபட்சத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் கொடுக்கலாம். எப்படியிருந்தாலுங்கூட, வளர்ந்து வருகின்ற நகரங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக, எல்லா நகரங்களிலும் இருக்கின்ற பேருந்து நிலையங்களை மேம்படுத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும் பல இடங்களில் நிலத்தைத் தேர்வு செய்ய முயற்சிக்கிறோம், ஆனால் சரியான இடம் கிடைக்கவில்லை, இடம் கிடைத்தவுடன் அதை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருக்கிறார். ஆகவே, அதன் அடிப்படையிலே விரைவாக*

*[2013 மார்ச் 28*

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**91—**

**மின்பாதை**

**20828*—**திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சிக்கு காவேரி குடிநீர் வழங்குவதற்குத் தடையில்லாத தனி மின்பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சிக்கு காவேரி குடிநீர் வழங்குவதற்கு தனி மின்பாதையின் மூலமாகத்தான் தடையில்லா மின்சாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் தந்த காவியத் தாயே! கடைக்கோடியில் இருக்கும் மணப்பாறை தொகுதி மக்களையும் காவேரி நீரைப் பருகச் செய்த காவல் தெய்வமே! நீங்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி எனது கேள்வியைக் கேட்கின்றேன்.



*2013 மார்ச் 28]*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகராட்சிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1995 ஆம் ஆண்டு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தனி மின்பாதை அமைத்து மணப்பாறை மக்களின் குடிநீர் குறை நீக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த தி.மு.க. அரசு 1996–ல் தனி மின்பாதையை பொது மின்பாதையாக மாற்றி குளித்தலை நகரில் சுமார் 30 மின்மாற்றிகளுக்கு மின் இணைப்பு கொடுத்துவிட்டது. தற்போது மின்தடை ஏற்படும்போதெல்லாம் குடிநீர் சரிவர கிடைக்காத காரணத்தால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, முன்பு இருந்ததைப்போல தனி மின்பாதை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.

**திரு. ஆர். சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மணப்பாறை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 28

93—

## தொழிற்பேட்டை

***19486—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலும்கூட, தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையோடு ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம்மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதி. ஆனாலும் இங்கு படித்த இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர். இந்தப் பகுதியில் அரசு தொழிற்சாலை ஏதும் இல்லாத நிலையில் இவர்கள் வேலைக்காக வெளிமாவட்டங்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும் செல்கின்ற சூழ்நிலை நிலவி வருகின்றது. இங்கே செயல்பட்டு வந்த அரசு கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டிருக்கின்றது. இங்கு பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர்



2013 மார்ச் 28]

தொகுதியில் உள்ள வத்திராயிருப்பு பகுதி தென்னை சாகுபடி நிறைந்த பகுதி. இங்கு உற்பத்தியாகின்ற தேங்காயிலிருந்து எடுக்கப்படும் தேங்காய் மட்டைகள் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலேயே தென்னை மரம் சார்ந்த தொழிற்சாலை ஒன்றை அரசு உருவாக்கிட வேண்டும்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையில் தென் மாவட்டங்களினுடைய தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது. அதை நாங்கள் பாராட்டுகிறோம். எனவே, தென் மாவட்டங்களுடைய தொழில் வளர்ச்சியை கருத்தில்கொண்டு, ஸ்ரீவில்லிபுத்தூரில் தொடங்குகின்ற தொழிற்பேட்டையானது இந்த அறிவிப்புக்கு ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாக விளங்கும். எனவே, ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்கிட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், விருதுநகர் வட்டம், சூலக்கரை மற்றும் கூரைகுண்டு ஆகிய பகுதிகளில் 45.65 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக 3,000 பேர் வேலைவாய்ப்பினை தற்போது பெற்றுவருகிறார்கள். அதேபோன்று, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டத்தில் இருக்கிற வெங்காநல்லூர் பகுதியில் 41.12 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக சுமார் 1,500 நபர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுநகர் பகுதியில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களில் தலா ரூ.156 இலட்சம் மதிப்பீட்டில் தீப்பெட்டி குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, திட்ட செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி நடைபெறுகிற நிலையில் உள்ளது. அதேபோன்று சாத்தூர், மேட்டுப்பட்டி ஆகிய பகுதிகளில் ரூ.135 இலட்சம் மற்றும் ரூ.360 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தீப்பெட்டி குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, மைய அரசினுடைய ஒப்புதலுக்காகப் பரிந்துரை

[2013 மார்ச் 28

செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, சிவகாசியில் ரூ.1,096 இலட்சம் மதிப்பீட்டில் அச்சுக் குழுமம் ஏற்படுத்த மாநில அரசிடமிருந்து ரூ.63 இலட்சம் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

நம்முடைய ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும், ஸ்ரீவில்லிபுத்தூரிலேயிருந்து 15 கி.மீ. தொலைவிலே உள்ள இராஜபாளையத்தில்தான் இத்தகைய ஒரு நல்ல ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அந்த மாவட்டத்திலே மாத்திரம் இதுவரை 5 தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே இராஜபாளையத்தில் தற்போது 5 மனைகள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொழிற்பேட்டையில் பங்குபெற வேண்டுமென்று விரும்புவார்களேயானால், அவற்றைக்கூட நம்முடைய உறுப்பினர் பெருமகனார் அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, பக்கத்திலே இருக்கக்கூடிய தொழிற்பேட்டைகளிலே உள்ள காலி இடங்களையெல்லாம், நம்முடைய ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே இருக்கக்கூடியவர்களும் பயன்படுத்தலாம் என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தேங்காய் மட்டையைப் பயன்படுத்திக்கொள்கிற வகையிலே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதற்கிணங்க, அந்தப் பகுதியிலே 20 நபர்களை ஒருங்கிணைப்பார்களேயானால், அந்தப் பகுதியிலே அதற்கான நிலம் கிடைத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே கண்டிப்பாக அந்தத் தொழிற்பேட்டையை அமைக்கும் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக உறுப்பினருடைய மேலான பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.



2013 மார்ச் 28]

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போன்று, எங்களுடைய பகுதியில் அதுபோன்ற தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்பேட்டைகளில் முழுவதும் பெண்கள் பணியாற்றி வருகின்றனர். படித்த இளைஞர்கள் அதிகம் இருக்கின்ற எங்களுடைய பகுதியில், அந்த இளைஞர்களுடைய வேலைவாய்ப்பைக் கருத்தில்கொண்டு, அதற்கான முறையில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையைத்தான் நான் வைக்கிறேன். அந்தப் பகுதியில் படித்த இளைஞர்களுடைய வாழ்க்கைத் தரத்தை, தொழிற்சாலைகளை அமைப்பதன்மூலம் முன்னேற்ற முடியும். அதேபோன்று, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தென் மாவட்டங்களுடைய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, அங்கே புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்று வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு ஒரு முக்கியமான அறிவிப்பாகும். எனவே, அதைக் கருத்தில்கொண்டு, ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதன்மூலமாக, அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்காகத்தான் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், NEEDS (New Entrepreneur cum Enterprise Development Scheme) என்கின்ற ஒரு சிறப்பான திட்டத்தை இங்கே அறிவித்திருக்கின்றார்கள். அந்தத் திட்டம் இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் சிறப்பான வரவேற்பைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே, அங்கேயுள்ள நிர்வாகக் குழுவின் பொது மேலாளர்மூலமாக தொழிற்பேட்டைகள் எல்லாம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, படித்த இளைஞர்களுக்கெல்லாம் நேரடியாகவே பல்வேறு உதவிகளைச் செய்கிற வகையில், சிறு தொழில் துறைமூலமாக ஒரு தொகுப்பினை, விரைவில் மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய உரையில் அறிவிக்கவிருக்கிறார்கள். எனவே,

நான் அதுகுறித்து இங்கே குறிப்பிட இயலாது என்றாலும், சிறு தொழிலை முன்னேற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான பல திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது. அப்போது தங்களுக்கு வேண்டிய அந்த உதவிகள் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2011 ஆம் ஆண்டு, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், ஒட்டன்சத்திரம் தொகுதியிலே ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அந்தத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான இடத்தை சென்னையிலுள்ள சிட்கோ நிறுவன அதிகாரிகளும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரில் வந்து ஆய்வு செய்தனர். எனது ஒட்டன்சத்திரம் தொகுதியில், எடைகோட்டை அருகே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான சுமார் 120 ஏக்கர் நிலத்தில் அரசு தொழிற்பேட்டை ஆரம்பிக்கலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பணியில் தற்போது தொய்வு ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒட்டன்சத்திரம் தொகுதியிலே விரைவில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், திண்டுக்கல் மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அறிவித்ததை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை என்கிற எண்ணத்தை இங்கே வெளிப்படுத்தினார்கள். கேள்வி நேரத்தின்போது குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்கின்ற நிலைப்பாடு இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு ஏற்ப நான் இங்கே பதிலை சொல்ல வேண்டிய நிலைக்கு ஆட்பட்டிருக்கின்றேன். அவர்களுடைய ஆட்சியிலே, அவர்களுடைய தலைவருடைய நல்லாட்சி என்று சொன்னார்களே, அந்த நல்லாட்சியில் பல இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டதே தவிர, அதை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதுமட்டுமல்ல, அறிவிப்பு செய்யப்பட்ட சில இடங்களில், இன்னும் நிலங்கள்கூட அடையாளம் காணப்படாத சூழல் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவற்றையெல்லாம் எங்கள் துறை ஆய்வு செய்துள்ளது. இவையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பாக தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என்று எந்த ஆட்சி அறிவித்திருந்தாலும், அந்தப் பகுதியிலே தொழிற்கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், உடனடியாக அதற்கு ஒரு தீர்வு காணுகின்ற வகையில் இன்னும் சில காலத்தில் முழுமையாக அவையெல்லாம் தீர்க்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**94—**

## தரம் உயர்த்துதல்

***6972—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அண்ணா பல்கலைக்கழக தரத்திற்கு இணையாக ஒரு கல்லூரியைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 மார்ச் 28

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 1978 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள கிண்டி பொறியியல் கல்லூரி, Alagappa College of Technology (ACT), School of Architecture and Planning (SAP), Madras Institute of Technology (MIT) போன்ற நான்கு கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக உருவாக்கித் தந்தார்கள். அதன் பிறகு, 2001 ஆம் ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் வெவ்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பொறியியல் கல்லூரிகளையெல்லாம் தனியாகப் பிரித்து, அண்ணா பல்கலைக்கழகத்தோடு சேர்த்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகம் உலகத் தரம் வாய்ந்த, உலகப் புகழ் வாய்ந்த பல்கலைக்கழகமாகும். அது பன்னாட்டு நிறுவனங்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் செல்வாக்கு பெற்ற பல்கலைக்கழகம் ஆகும். உலகத்திலுள்ள 8,500 பல்கலைக்கழகங்களில், 200–வது இடத்தில் இருந்த அண்ணா பல்கலைக்கழகம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், தனியாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளோ, எந்தவிதமான வசதிகளோ செய்யப்படாமல் இருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக முதல்வராக மீண்டும் மூன்றாவது முறையாக பொறுப்பேற்றவுடன், தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் ஒன்றாக இணைத்து, ஒரே குடையின்கீழ் கொண்டுவந்தார்கள். இந்தப் பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரியை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு நிகராக உருவாக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். தமிழகத்தில் 7 அரசு பொறியியல் கல்லூரிகள், 3 அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், 525 சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள், 18



2013 மார்ச் 28]

அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் என மொத்தம் 553 பொறியியல் கல்லூரிகள் இன்றைக்கு இருக்கின்றன. அத்தனை பொறியியல் கல்லூரிகளையும் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களாக உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுபட்ட நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப, எந்தெந்த இடங்களில் கல்லூரிகள் வேண்டுமோ, அந்தந்த இடங்களில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் புதிய கல்லூரிகளைத் துவக்கி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

முற்பகல் 10–30

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்பட்டு நின்ற தமிழகத்தை பாரதமே வியக்கும்வண்ணம் இந்தியத் திருநாட்டிலே தமிழகத்தை கல்வியில் மிகச் சிறந்த முதன்மைபெற்ற மாநிலமாக உருவாக்க பள்ளிக் கல்வித் துறைக்கு 16,965 கோடி ரூபாயும், உயர் கல்வித் துறைக்கு 673 கோடி ரூபாயும் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து கல்விப் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர், பொன்னியின் செல்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து பணிவோடு வணங்குகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் அண்ணா பல்கலைக்கழகத் தரத்திற்கு இணையாக ஒரு கல்லூரியைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்ற கோரிக்கைக்கு, சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் தரமான கல்லூரிகளை உருவாக்குவதற்கு ஆணை வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பள்ளிக் கல்வியை முடித்த மாணவர்கள் பெரும்பாலும் பொறியியல் கல்வி படிக்க விரும்புகிறார்கள். இந்நிலையில் மலை மாவட்டத்தில் இன்று வரை ஓர் அரசுப் பொறியியல் கல்லூரிகூட இல்லாத காரணத்தை மனதில்கொண்டு இந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் ஓர் அரசுப் பொறியியல் கல்லூரியை இந்த அரசாங்கம் அமைத்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, மாணவர்கள், அதுவும் கிராமப்புற மாணவர்கள் அனைவரும் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டும், அனைத்து சமுதாய மக்களும், ஏழை எளிய மாணவ, மாணவிகளும், ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவ, மாணவிகளும் உயர் கல்வியில் சேர்ந்து தங்களுடைய கல்வித் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், ஆட்சி அமைந்த இரண்டு ஆண்டுகளில் இதுவரையில் 3 அரசுப் பொறியியல் கல்லூரிகளை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

2012–2013 ஆம் ஆண்டு தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு புதிய கல்லூரியையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு புதிய கல்லூரியையும், தருமபுரி மாவட்டத்தில் ஒரு புதிய அரசுப் பொறியியல் கல்லூரியையும் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு ஒரு புதிய கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தாங்கள் சென்ற முறை 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தீர்கள். அந்த நேரத்திலே உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எந்தப் பகுதிக்கு கல்லூரி தேவையோ அந்தப் பகுதிக்கு புதிய பொறியியல் கல்லூரியை உருவாக்கித் தருவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**95—**

## வேளாண்மைக் கல்லூரி

***25073—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மன்னார்குடியில் புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகள் டெல்டா மாவட்டங்களின் மையப் பகுதிகளாகும். வளர்ந்து வரும் நாகரிக உலகில் விவசாயத்தில் இளைஞர்கள் பெரிதும் ஆர்வம் காட்டாமல் இருப்பது விவசாயம் அழிந்துவிடும் சூழ்நிலைக்கு வித்திடுவதாக உள்ளது. முழுக்க முழுக்க நெல், உளுந்து, கடலை போன்ற பயிர்களையே நம்பி இருக்கும் எங்கள் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கைகளில் இக்கோரிக்கை மிகவும் முக்கியமான ஒன்று. இளைஞர்களுக்கும் விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும். விவசாயக் குடும்பங்களில் பிறந்தவர்களாக

[2013 மார்ச் 28

இருப்பதால் அடிப்படையிலேயே விவசாயம் குறித்த அனுபவம் எங்கள் பகுதி இளைஞர்களுக்கு உண்டு. ஆகையால் அவர்கள் விவசாயம் சார்ந்த பாடப் பிரிவுகளில் வெற்றி பெறுவது உறுதி. ஆகவே, இந்த அரசு மன்னார்குடி பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதிக்கு அருகில் உள்ள திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண் கல்லூரியும், ஒரு மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியும், குமுளூரில் ஒரு வேளாண் பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. இது தவிர, தஞ்சாவூரில் ஒரு பட்டயக் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது. எனவே, மன்னார்குடி தொகுதியிலுள்ள மாணவ, மாணவிகள் மேற்கண்ட கல்லூரிகளில் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்பு பெருமளவில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதி மையப் பகுதியாக இருப்பதாலும் அங்கே இளைஞர்கள் அதிகம் வசிப்பதாலும் தான் இந்தக் கேள்வி எழுகிறது. நீடாமங்கலம் பகுதி ஒரத்தூரில் 47 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் விவசாய ஆராய்ச்சி மையம் மற்றும் வேளாண்மைத் துறையின்கீழ் காஞ்சிக்குடிகாட்டில் 49 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விவசாயப் பண்ணை போன்ற இடங்களில் அரசுக்குத் தேவையான இடங்களும் உள்ளன. மேலும், நீடாமங்கலத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி மையத்திற்கு இரயில் வசதி, தேசிய நெடுஞ்சாலை வசதி மற்றும் பேருந்து வசதி இருப்பதால், தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து மாணவர்கள் வந்து படிப்பதற்கான வசதிகளும் உண்டு. ஆகவே, தஞ்சை, திருவாரூர், நாகை பகுதிகளின் மையப் பகுதியாகத் திகழும் எங்கள் மன்னார்குடி தொகுதியில் இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, எதிர்காலத்தில் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபாட்டோடு இருக்க



2013 மார்ச் 28]

மன்னார்குடியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கிற இடங்களில் எல்லாம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், அறிவியல் ஆராய்ச்சி நிலையம்போல் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. புதிதாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால் 100 ஏக்கர் விவசாய நிலமும், 50 கோடி ரூபாய் வரை நிதியும் தேவைப்படுகிறது. இதைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்து, தேவை இருப்பின், நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**96—**

**சாலை வசதி**

***162—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியாச்சி சந்திப்பிலிருந்து தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கோவில்பட்டிக்கு நேரடி சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

[2013 மார்ச் 28

(அ) மற்றும் (ஆ) மணியாச்சி சந்திப்பிலிருந்து தூத்துக்குடி செல்வதற்கு 39 கிலோ மீட்டர் நீளத்தில் உள்ள சாலையும், மணியாச்சி சந்திப்பிலிருந்து திருநெல்வேலி செல்வதற்கு 27 கிலோ மீட்டர் சாலையும் மற்றும் மணியாச்சி சந்திப்பிலிருந்து கோவில்பட்டி செல்வதற்கு 47 கிலோ மீட்டர் சாலையும் போக்குவரத்துக்கு ஏற்றதாக நல்ல நிலையில் உள்ளன. அவை நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தாற்போல பால் வளம் மிக்க பகுதி தூத்துக்குடியாகும். தூத்துக்குடியிலிருந்து எண்ணற்ற வணிகர்களும், பொதுமக்களும் சென்னை மற்றும் பிற நகரங்களுக்கு தினந்தோறும் செல்கின்றனர். ஆனால், தற்போது தூத்துக்குடியிலிருந்து ஒரே ஒரு இரயில் மட்டுமே இயக்கப்படுகிறது. அதேசமயத்தில், திருவனந்தபுரம்–திருநெல்வேலியிலிருந்து ஏறக்குறைய பத்துக்கும் மேற்பட்ட இரயில்கள் மணியாச்சி வந்து செல்கின்றன. தூத்துக்குடியிலிருந்து மணியாச்சிக்கு தற்போது ஒட்டப்பிடாரம் குறுக்கு சாலை வழியாகச் செல்வதற்கு 47 கிலோ மீட்டர் ஆகிறது. மணியாச்சியிலிருந்து இரயில் பாதை ஓரத்தில் எண்ணற்ற அரசு நிலங்கள் இருக்கின்றன. அங்கு ஒரு பாதை அமைத்தால் 20 கிலோ மீட்டரில் தூத்துக்குடி சென்றடைய முடியும். அது ஒட்டுமொத்தமாக அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பல்வேறு வகைகளில் உதவிகரமாக இருக்கும். எனவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒரு சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனை மாண்புமிகு அம்மா



2013 மார்ச் 28]

அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில், பூவங்கோடு–ஆத்தூர் இணைப்புச் சாலை போக்குவரத்து நெரிசல் மிக்க குறுகிய ஒருவழிச் சாலையாகும். இந்தச் சாலை வழியாக ஏராளமான பேருந்துகள், கனரக வாகனங்கள், கல்லூரிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வந்து செல்வதால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தி, தரம் உயர்த்த நெடுஞ்சாலைத் துறை பிரேரணை அனுப்பியுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை அகலப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே வினாவைத் தொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில்கூட 168 கிலோ மீட்டர் இடைவழித்தடச் சாலைகள் இருவழித்தடச் சாலைகளாகவும், 1,000 கிலோ மீட்டர் ஒருவழித்தடச் சாலைகள், இடைவழித் தடங்களாகவும் தரம் உயர்த்தப்படும் எனக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையை

[2013 மார்ச் 28

ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப அகலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**97—**

**வாய்க்கால் சீரமைப்பு**

***7200—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதியிலுள்ள பூலா ஏரி வாய்க்காலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூலா ஏரியிலிருந்து கொண்டசமுத்திரம் ஏரிக்கு தண்ணீர் செல்லும் வரத்துக் கால்வாயை மேம்படுத்தும் திட்டத்திற்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 140 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுநாள் வரையில் 36 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் வரும் ஜூலை மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

முற்பகல் 10–40

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட உச்ச நீதிமன்றம் சென்று போராடி வெற்றி கண்டு காவிரியை மீட்டுத் தந்த காவிரித் தாயே! இலங்கையில் அப்பாவி ஈழத் தமிழ் மக்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷேவைக் கண்டித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்த வீரத் தாயே! ஒட்டுமொத்தத் தமிழர்களின் பாதுகாவலராக விளங்கும் பாசமும் நேசமும் மிக்க தாயே! நேற்றையதினம் சட்டமன்றப் பேரவையில் இலங்கை இறுதிகட்டப் போரின்போது கொல்லப்பட்ட அப்பாவித் தமிழரின் படுகொலையைக் கண்டித்து கல்லூரி மாணவர்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பதுபோல் ஒரு ** நாடகமாடும் தி.மு.க.வின் முகத்திரையைக் கிழித்தெறிந்த சிங்கநிகர் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி . . .



2013 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினரைக் கேள்வியைக் கேட்கச் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** சேலம் மேற்குத் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்திற்குட்பட்ட செல்லப்பிள்ளைகுட்டை, முத்துநாயக்கன்பட்டி, செம்மண்கூடல் ஆகிய பகுதிகளில் ஒட்டுமொத்த விவசாயிகளின். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரைக் கேள்வி கேட்கச் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கோ. வெங்கடாஜலம்:** நீண்டநாள் கோரிக்கையான பூலா ஏரிக் கால்வாயைச் சீரமைக்க 140 இலட்சம் ரூபாய் வாரி வழங்கிய வள்ளலின் வாரிசே, நான் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் இப்பணி முழுமையாகச் செயல்பட கொண்டசமுத்திரம் ஏரியிலிருந்து கங்காதரன்குட்டை, நைனாத்தாள் ஏரி மற்றும் செம்மண்கூடல் சின்ன ஏரி ஆகிய ஏரிகளுக்குச் செல்லும் வரத்துக் கால்வாயைச் சீரமைக்க 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் . . . (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் கேள்விதான் கேட்கிறார், பிறகு என்ன? (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே நிதியை ஒதுக்கீடு செய்து பணிகளைத் தொடங்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கேள்விதான் கேட்டிருக்கிறார், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள், கேள்விதான் கேட்டிருக்கிறார். அதையே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, எதற்கெடுத்தாலும் எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள். கேள்விதான் கேட்டார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், குற்றச்சாட்டு இல்லாமல் இனிமேல் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வியைக் கேட்கச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டு கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதியினை ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.



2013 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் கேள்வி எழுப்பும்போது குற்றச்சாட்டு இல்லாத கேள்வியாகக் கேட்டு பதில் பெறும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் பேசியதில் குற்றச்சாட்டு சொல்வது மாதிரி இருந்தால், அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு அதைக் கண்டிப்பாக நீக்கி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், காட்டுமன்னார்குடி தாலுகாவிலே கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே இருக்கிற பாசன வடிகால் வாய்க்கால்கள் தூர் வாரப்படாமல் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. எனவே, இந்த ஆண்டு சிறப்பு நிதி ஒதுக்கி அங்கே இருக்கிற பாசன வடிகால் வாய்க்கால்களைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தி ஆழப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து இந்த ஆண்டு அது நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசன வாய்க்கால்களைச் செப்பனிட்டு சீரமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் இனிமேல் மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றச்சாட்டு ஏதேனும் சொன்னால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

**டாக்டர் ச. துரையப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி பொன்னியின் செல்வி அம்மா அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இங்கு வாழமலையாறு நீர்த்தேக்கத் திட்டம் ஒன்று அமையவுள்ளது. இந்தத் திட்டம் அமையப்பெற்றால் விவசாயம், குடிநீர் போன்ற எல்லாப் பிரச்சினைகளும் இந்தத் தொகுதியில் தீர்க்கப்படும். ஆகவே, பொன்னியின் செல்வி அம்மாவின் அரசு இதனை அமைக்க ஆவன செய்யுமா? ஆம் என்றால் எப்போது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியும் நீங்களே, பதிலும் நீங்களேவா! மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.





**98—**

### கால்நடை கிளை நிலையம்

***17602—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டி பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பெற வேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியில் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும் என்பதும், 3 கி.மீ. தூரத்திற்கு எந்தவித கால்நடை கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்பதும் அரசின் விதிமுறைகள். நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருப்பதால், நமது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக ஒரு கால்நடை கிளை நிலையத்தினை எருமலைநாயக்கன்பட்டி பகுதியில் அமைக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அதுவொரு கிராமப் பகுதியாக இருந்தாலும், ஒரு பெரிய கிராமம் ஆகும். ஏறத்தாழ 2,450 பசு மற்றும் எருமை மாடுகளும் 2,250–க்கும் மேற்பட்ட வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளும், 24,000 கோழி வளர்ப்புப் பண்ணைகளும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அங்கு கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான எல்லாத் தகுதிகளும்

இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் மருந்தகத்தோடு இணைந்த ஒரு கால்நடை மருத்துவமனையை அங்கே துவக்குவதற்குத் தேவையான அளவிற்கு கால்நடைகள் இருக்கின்றன. இது மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. மக்களும் அதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். கால்நடை துறையோடு நான் பேசியபோது அவர்களும் அதற்குரிய எல்லா ஏற்பாடுகளுடன் இருக்கிறார்கள். நாங்களும் அதற்கு உதவி செய்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பரிந்துரை செய்ய தயாராக இருக்கிறார்கள். கடந்த ஆண்டும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அப்பகுதி கிராம மக்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டி பகுதியில் ஒரு கால்நடை கிளை நிலையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துத் தருவார்கள் என்று சொல்லிக்கொள்வதோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையினைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்ததற்கு அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இருவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.





**99—**

## சிமெண்ட் ஆலை

***8428—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சிமெண்ட் ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொதுவாக ஆண்டிற்கு 10 இலட்சம் டன் உற்பத்தி செய்யும் திறனுடைய சிமெண்ட் ஆலை அமைக்க 12 இலட்சம் முதல் 14 இலட்சம் மெட்ரிக் டன் சுண்ணாம்புக் கல் ஆலையின் அருகிலேயே 15 ஆண்டுகளுக்குக் கிடைக்க வேண்டும். சுண்ணாம்புக் கல் சுரங்கம் மானாமதுரையில் இல்லாததால், மானாமதுரையில் ஏற்கெனவே சிப்காட் வளாகம் உள்ளதால் புதிய சிமெண்ட் ஆலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களான, "திட்டங்களுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காக திட்டம்" என்ற தார்மீக மந்திரத்திற்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு தென் மாவட்ட மக்களின் நலனை மனதில்கொண்டு, சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, தொழில் துறையில் பின்தங்கியுள்ள மானாமதுரை உள்ளிட்ட இடங்களில் தொழில் தொடங்க சிறப்புச் சலுகைகள் வழங்க உள்ளதால் இப்பகுதியில் எந்தவிதமான தொழிற்சாலை தொடங்கினால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

[2013 மார்ச் 28

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவராக, தமிழர்களுடைய பாதுகாவலராக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியானது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இந்த மானாமதுரை பகுதியில் விவசாயத் தொழில் மட்டும்தான் முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. இந்தப் பின்தங்கிய பகுதியை முன்னேற்றுவதற்காக ஏழைகளின் இதய தெய்வமாக வாழ்ந்து, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், 1979 ஆம் ஆண்டு மானாமதுரையில் பல தொழில்களை ஏற்படுத்தவேண்டுமென்று சிப்காட் தொழில் வளாகத்தைக் கொண்டுவந்தார்கள். நம்முடைய மானாமதுரை பகுதியில் இதுவரை எந்தத் தொழிற்சாலைகளும் கிடையாது.

எனது மானாமதுரை தொகுதி எப்போதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கோட்டையாக விளங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதியிலே ஏழையெளிய மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலும், படித்த இளைஞர்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அங்குள்ள ஏழையெளிய மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டும், இளைஞர்களுடைய வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடும், அந்தப் பகுதியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துத் தந்தால் நலமாக இருக்கும். மானாமதுரையில் சிப்காட் வளாகத்தில் 228.96 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அங்கே நல்ல தண்ணீர் வளமும், போக்குவரத்து வசதியும் இருக்கின்றன. எனவே, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சிப்காட் வளாகம் 492 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 71 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 17 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 31 தொழிற்சாலைகள் குறுகிய காலத்திலே தொழிலை ஆரம்பிக்கவிருக்கின்றன. 1,000 கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீட்டுடன், சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.



2013 மார்ச் 28]

ஏற்கெனவே, அரியலூர் சிமெண்ட் ஆலையில் 5 இலட்சம் டன்னும், ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 2 இலட்சம் டன்னும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட புகளூர் காகித ஆலையில் 2 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய சிமெண்ட் ஆலையும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது தென் மாவட்டங்களிலே பல சலுகைகளை அறிவிக்க இருக்கின்றார்கள். அந்த வகையிலே புதிய தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோர் வருகின்றபோது மானாமதுரைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முன்னுரிமை தரப்படும் எனக் கூறியதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**100—**

**நூற்பாலை நவீனமயமாக்கல்**

*__6034—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:__

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 மார்ச் 28

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் இயந்திரங்களை நவீனப்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் செயல் திறன் மற்றும் நிதிநிலைமையை முன்னேற்றும் விதமாக இயங்கிவருகின்ற 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தென்னிந்திய துணி நூல் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில், ஆய்வினை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் ரூபாய் 104.41 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வாயிலாக, புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் இயங்கிவரும், பாரதி கூட்டுறவு நூற்பாலை இயந்திரங்களை நவீனப்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18.73 கோடி ரூபாய் நிதியாக வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**101—**

**மாணவர் விடுதி**

***15289—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2013 மார்ச் 28]

(அ) மேலூர் தொகுதி, சேக்கிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, சேக்கிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 573 ஆகும். இதில் 283 மாணவர்களும், 290 மாணவிகளும் பயின்று வருகிறார்கள். இவர்களில் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவிகள் 91 நபர்கள் ஆவர். அதில் 50 ஆதி திராவிடர் மாணவர்களும், 41 ஆதி திராவிடர் மாணவிகளும் கல்வி பெறுகின்றனர். மேலும், மேலூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 5 ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்படுகின்றன. இவற்றில் கொட்டாம்பட்டி, மேலூர், திருவாதவூர், வெள்ளலூர் ஆகிய இடங்களில் பள்ளி மாணவர் விடுதியும், மேலூரில் ஒரு கல்லூரி மாணவியர் விடுதியும் செயல்படுகின்றன. எனவே, சேக்கிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதி திராவிடர் நல மாணவர்களுக்கு புதிய விடுதி துவக்குவதற்குத் தேவையான மாணவர்களின் எண்ணிக்கை, இடம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் இருப்பின் அவற்றின் அடிப்படையில் அவ்விடத்தில் ஆதி திராவிடர் நல விடுதி அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஸ்ரீ திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகும் சரி, சுதந்திரம் அடைவதற்கு

[2013 மார்ச் 28

முன்பும் சரி இந்திய அரசியல் வரலாற்றில் விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம், புயல் நிவாரணம் கொடுத்ததுதான் உண்டு. ஆனால், இந்திய அரசியலில் தலைவர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக வறட்சிக்கு நிவாரணம் கொடுத்த ஒரே முதல்வர் இந்திய அரசியலிலே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயி என்ற அடிப்படையிலே டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலூர் தொகுதியில், சேக்கிப்பட்டி கிராமத்தில் இயங்கி வருகின்ற அரசு மேல்நிலைப் பள்ளியில், கிராமப் பகுதிகளைச் சார்ந்த ஏழையெளிய மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

மேலூர் தொகுதியில் உள்ள மாணவர்கள் மட்டுமல்லாமல், அருகில் உள்ள திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதியில் இருக்கின்ற மாணவ, மாணவியர்கள், சுமார் 527 பேர் அந்தப் பள்ளியில் கல்வி பயின்று வருகின்றார்கள். மிகவும் ஏழ்மைக் குடும்பத்தைச் சேர்ந்த ஆதி திராவிட மாணவர்கள் அங்கு படிக்கின்றார்கள். இடவசதி அங்கு நிறைய இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அந்தப் பகுதிக்கு ஆதி திராவிடர் மாணவர் விடுதி ஒன்றை கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதியில் மட்டும் ஐந்து ஆதி திராவிடர் நல விடுதிகள் செயல்படுகின்றன. கொட்டாம்பட்டியில் 31 மாணவர்களும், திருவாதவூரில் 30 மாணவர்களும், மேலூரில் 38 மாணவர்களும், வெள்ளலூரில் 34 மாணவர்களும் மற்றும் மேலூரில் உள்ள கல்லூரி மாணவியர் விடுதிகளில் 52 மாணவிகளும், ஆக மொத்தம் 185 மாணவ, மாணவியர்களும் தங்கி கல்வி பயின்று வருகின்றார்கள்.

மதுரை மாவட்டத்தில் 56 ஆதி திராவிடர் நல விடுதிகள் உள்ளன. இவ்விடுதிகளில் 3,162 மாணவ, மாணவிகள் தங்கி கல்வி



2013 மார்ச் 28]

பயின்று வருகின்றனர். மேலும் மேலூரில் அரசு மேல்நிலைப் பள்ளியில் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்று வருவதாக இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார்கள். இடம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் இருப்பின், அவற்றின் அடிப்படையில் அவ்விடத்தில் ஆதி திராவிடர் நல விடுதிகள் அமைப்பதற்கு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட வசதியும், கட்டட வசதியும் இருந்தால் அமைத்துத் தருகிறேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 3,500 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். அந்தப் பள்ளிக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக நான் இருந்து வருகின்றேன். ஆகையால், அந்தப் பள்ளி மாணவியர்க்கு ஆதி திராவிடர் நல விடுதி ஒன்றை அமைத்துக்கொடுக்க வேண்டுகிறேன். ஏறத்தாழ 3,500 மாணவியர்களில் 650 பேர் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதில் கல்வி பயின்று வருகின்றார்கள். மதுரை மாவட்டத்திலே சிறந்த பள்ளியாக, தனியார் பள்ளிக்கு எடுத்துக்காட்டாக அம்மாவினுடைய ஆட்சியில் அந்தப் பள்ளி இயங்கி வருகின்றது. இந்த ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பள்ளிக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று இந்த ஆண்டு அங்கு ஆதி திராவிடர் மாணவியர் விடுதி கட்டித்தர வேண்டுகிறேன். இடவசதி வேண்டுமென்றால், நானே இடங்களையும் தேர்வு செய்து தருகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுதி கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 மார்ச் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேலூரில், 3,500 மாணவிகள் கல்வி பயின்று வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், 44, ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.35.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இப்போது அந்தப் பணிகள் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைபோன்று இடம் இருப்பின், கட்டமைப்பு வசதிகள் இருப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று மேலூரில் ஒரு மாணவியர் விடுதி கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**102—**

## சொந்தக் கட்டடம்

*__13520—திரு. சு. ரவி:__

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் இன்றைய நிலவரப்படி 10,256 காப்பீட்டாளர்கள்



2013 மார்ச் 28]

பயன்பெற்று வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 155 நோயாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். காப்பீட்டாளர்கள் மற்றும் சிகிச்சை பெறுவோர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** காப்பீட்டாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் தினசரி வருகை எண்ணிக்கை 250—க்கு மேற்படும்போது, மேற்கண்ட மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட உரிய இடத்தினைத் தெரிவு செய்து கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு புது டெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்திற்கு அனுப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** இந்திய திருநாட்டில், தாய்த் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிட உண்ணாமல் உழைத்து, உறங்காமல் விழித்து, 'அரசைத் தேடி மக்கள்' என்ற நிலையை மாற்றி 'மக்களைத் தேடி அரசு' என்று அற்புதமான 'அம்மா திட்டம்' ஒன்றைக் கொண்டுவந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அன்பின் உறைவிடமாய், அறிவின் இருப்பிடமாய், அழகின் அமைவிடமாய், அஞ்சாமையின் வாழ்விடமாய், ஆற்றலின் ஊற்றாய், துணிச்சலின் பிறப்பிடமாய், போர்க் குணத்தின் புகலிடமாய், தமிழக மக்களின் ஒளிவிளக்காய், தொழிலாளர் தோழர்களின் விடிவெள்ளியாய் திகழ்ந்து வரும் நாளைய பாரதப் பிரதமர், நான் வணங்கும் தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது தொகுதியிலே சுமார் 30 வருடங்களாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற தொழிலாளர் நல ஈட்டுறுதி

[2013 மார்ச் 28

மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதாக நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அரக்கோணம் தொகுதியிலுள்ள M.R.F., Ultra Tech., Ramco போன்ற பெரிய தனியார் தொழிற்சாலைகளிலும், பல சிறிய தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 55,000 பேர், அந்தத் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தை நம்பியுள்ளார்கள். மாதந்தோறும் 5,000–க்கும் மேற்பட்டவர்களும், தினந்தோறும் 200–க்கும் மேற்பட்டவர்களும் அந்த மருந்தகத்திற்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அங்கே, உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற முடியவில்லை. எனவே, அந்த மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, நீண்ட நாட்களாக காலியாக உள்ள முதன்மை தலைமை மருத்துவர், உதவியாளர், மருத்துவப் பணியாளர், லேப் டெக்னிஷியன் ஆகிய பணியிடங்களை நிரப்பித் தருமாறும், ஆய்வக உபகரணங்களை வழங்கிடுமாறும் மாண்புமிகு அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். அங்கே 25,000 தொழிலாளர்களுக்கு மேல் இருக்கின்ற பட்சத்தில்தான், நாம் அங்கே மருத்துவமனை கட்டுவது உசிதப்படும். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது அங்கே 155 பயனாளிகள்தான் புறநோயாளிகளாக வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைத் தரம் உயர்த்த முடியாது என்பதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பணியிடங்கள் காலியாக இருப்பதைப் பற்றி சொன்னார்கள். 11 பணியிடங்கள் அங்கே ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அதில், 7 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, 4 இடங்கள் காலிப் பணியிடங்களாக



2013 மார்ச் 28]

இருந்தாலும், மேற்கண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கருணையுள்ளத்தோடு பரிசீலித்து, அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் மொத்தமுள்ள 691 பணியிடங்களில், 557 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள 134 காலிப் பணியிடங்களை நிரப்ப (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்களை நிரப்பித் தருகிறேன் என்று சொல்லிய, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

## மாணவர் விடுதி

***18384—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு இரண்டு ஆண்டுகளில் 56 விடுதிகளை அளித்து சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமம், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 700 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். சுற்றுப்புறத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து இங்கே வந்து படிக்கிறார்கள். அங்கே 17 கிலோ மீட்டர் தூர சுற்றளவில் எந்தவொரு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியும் இல்லாத காரணத்தால், அந்த ஊரிலே பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைத்துத் தந்தால், மாணவ, மாணவிகள் சுற்றுப்புறத்திலிருக்கின்ற பள்ளிகளிலிருந்து வருகை தந்து, தங்கிப் படிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசிபெற்று, அங்கே ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பாரற்றுக் கிடந்த இந்தத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் புத்துயிர் அளித்து, மிக அதிகமான முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போன்று, அந்தப் பகுதியில் விடுதிகள் அமைக்கத் தேவை ஏற்படுமானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் விடுதி ஒன்றை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியிலே இடவசதி இருப்பதால் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பரிசீலித்து அதை செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**104—**

## திருப்பணி

***20361—திரு. இரா. குமரகுரு:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2013 மார்ச் 28

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், பாதூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ கிருஷ்ணன் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பாதூர் கிராமம், அருள்மிகு வேணுகோபாலசாமி என்கிற ஸ்ரீ கிருஷ்ணன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப் பிரிவு 49(1)–ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சேராத ஒரு சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வருமானம் ஏதும் இல்லை. ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று பூஜைகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் உதவிபெறும் திருக்கோயில் மைய நிதியுதவியை ரூ.25,000/–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்வு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதனை முதலீடு செய்து வரும் வட்டித் தொகையிலிருந்து ஒரு கால பூஜை சிறப்பாக நடைபெற ஆணையிட்டிருக்கின்றார்கள்.

இத்திருக்கோயிலுக்கு ஊர்ப் பொது மக்கள் மூலமாக தற்போது சன்னதி கட்டப்பட்டுள்ளது. வண்ணப் பூச்சு வேலைகள் மற்றும் தரைதளப் பணிகள் மட்டும் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்புதலோடு நிதியுதவி வழங்கப்பட்டு, திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, விரைவிலே குடமுழுக்கு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய



2013 மார்ச் 28]

அரசிதழில் இடம் பெறச் செய்ய உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி வாகை சூடி, தமிழக விவசாயிகளைக் காப்பாற்றிய காவேரித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) செந்தமிழன் இரத்தம் குடித்த சிங்களவன் கூட்டத்தைத் தமிழகத்தின் எல்லைக்குள்ளே தடம் பதிக்க விடமாட்டேன் என வீறுகொண்டு எழுந்திட்ட வீரத்தின் விளைநிலமே, தமிழக தனி மனித இராணுவமே, ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நேற்று சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக விளங்கும் நாளைய பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பாதூர் கிராமத்திலுள்ள அருள்மிகு கிருஷ்ணன் திருக்கோயில் கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இத்திருக்கோயில் 1993 ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்யப்பட்டு, சுமார் 20 வருடங்கள் ஆகின்றன. அதன் பிறகு அந்தத் திருக்கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்த காரணத்தினால், அந்த ஊர் மக்கள் சேர்ந்து, அந்தக் கோயில் திருப்பணிகளைச் செய்து வருகிறார்கள். அந்தக் கோயிலுக்குப் பண வசதி இல்லாத காரணத்தினால், ஒரு கால பூஜை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்த ஒரு கால பூஜை இப்போது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே நிதி ஒதுக்கீடு செய்து, குடமுழுக்கு செய்யப்படும் என்று அறிவித்தமைக்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மார்ச் 28

**105—**

## வட்டாட்சியர் அலுவலகம்

***23160—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணியைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு, குறிஞ்சிப்பாடி வட்டம், ராசாக்குப்பம் கிராமம், புல எண் 48/13, விஸ்தீரணம் 1.18 ஹெக்டேர் களம் புறம்போக்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடு கட்டிப் போரடித்தால் மாளாது, மாளாது என்று சொல்லி யானை கட்டிப் போரடித்த காவேரி டெல்டா பகுதிவாழ் விவசாயப் பெருமக்களுடைய வாழ்வு வளம் பெற, நலம் பெற, வீரம், விவேகம், அறிவாற்றல் இவை அனைத்தும் ஒருங்கே பெற்றிருக்கிற வீரத்தின் விளைநிலமாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய 22 ஆண்டுக்கால போராட்டத்திற்குப் பின்னால், இறுதியில் சட்டப் போராட்டத்தையும் நடத்தி காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்திருக்கிற எங்களுடைய தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், அதோடு மாணவர்களுடைய நலனைக் கருத்திலேகொண்டு தாயாக நான் இருக்கிறேன் யாரும் கவலைப்பட, அச்சப்படத் தேவையில்லை என்று சொல்லி இலங்கைவாழ் தமிழர்களுக்காக ஒரு தீர்மானம் அல்ல ஓர் ஆயிரம் தீர்மானத்தை நிறைவேற்றித் தர, பாதுகாக்க



2013 மார்ச் 28]

நான் இருக்கிறேன் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) அமர்ந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி குறிஞ்சிப்பாடி தொகுதியிலே புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இடத்தைத் தேர்வு செய்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் குறிஞ்சிப்பாடி தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின், என்ன விஷயம், சொல்லுங்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் வெளிவந்துள்ள அகில இந்திய அளவில் பிரபலமான ஒரு பத்திரிகையில், Times of India பத்திரிகையில் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை திடீரென்று சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) திடீரென்று பேசினால் எப்படி? இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இதுகுறித்து என்னிடம் முன்பே அனுமதி கேட்டிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) வேறு ஏதோ பேசப் போகிறீர்கள் என்று நினைத்தால், அறிவிப்புக் கொடுக்காமல் இப்படி பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) இதை நான் allow பண்ண முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) பத்திரிகையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2013 மார்ச் 28

வந்தால் என்ன? (குறுக்கீடுகள்) பத்திரிகைகளில் ஆயிரம் செய்திகள் வருகின்றன; அவை எல்லாவற்றையும் சட்டசபையில் பேச முடியாது. (குறுக்கீடுகள்) என்னிடம் முன்பே நீங்கள் அனுமதி கேட்டிருக்க வேண்டும். பத்திரிகைச் செய்தியை என்னிடம் காண்பித்து அனுமதி வாங்கியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் திடீரென்று பேசுவது முறையில்லை. (குறுக்கீடுகள்) இதை அவையில் கொண்டு வந்து கொடுத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னரே என்னுடைய அறையில் கொண்டு வந்து கொடுத்து, என்னிடம் அனுமதி வாங்கியிருக்க வேண்டும். திடீரென்று கொடுத்தால் அதை என்னால் எடுத்துக்கொள்ள முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று வேறு நிறைய அலுவல்கள் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி வாங்கிவிட்டு நீங்கள் பேச வேண்டும். அனுமதியில்லாமல் இப்படிப் பேசக் கூடாது, முறையாக அறிவிப்பைக் கொடுங்கள்; முறையாக அறிவிப்புக் கொடுத்தால் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திடீரென்று இப்படியெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது, உட்காருங்கள். B.A.C. என்று ஒரு குழு இருக்கிறது. (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தபடிதான் நான் எடுத்துக் கொள்ள முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் சௌகரியத்திற்கு எழுப்பினால் என்னால் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*முற்பகல் 11–15*

ஏற்கெனவே முறையாக அறிவிப்பு கொடுத்து ஒரு Call Attention–ஐ இன்றைக்கு நாம் எடுத்துக்கொள்கிறோம். இதுபோன்று முறையாக அறிவிப்பு கொடுக்காமல், வெளிநடப்பு செய்வதற்கென்றே இவர்கள் திடீரென்று இந்த மாதிரி செய்வது முறையற்ற செயல். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### அரசு அலுவலகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. அரசு அலுவலகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியை சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, க. பாலகிருஷ்ணன்,



2013 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எம். ஆறுமுகம், சு. குணசேகரன், கே. உலகநாதன், வெ. பொன்னுப்பாண்டி, பி.எல். சுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் என்.ஆர். ரெங்கராஜன், ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அறிவிப்புக் கொடுத்துள்ள உறுப்பினர்களில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு அலுவலகங்களிலே, பொதுத் துறை நிறுவனங்களிலே, உள்ளாட்சி அமைப்புகளிலே, எல்லா இடங்களிலும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. பணியாளர்கள் இல்லை. ஆகவே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிகழ்ச்சிநிரலில் என்ன போட்டிருக்கிறதோ அதை மட்டும் படியுங்கள். கவனத்தை ஈர்க்கும் அந்தப் பகுதியை மட்டும் படியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** ஒரு விவரத்தைச் சொல்லிவிட்டு, அதை நான் படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பிறகு விவரமாக கேள்வி கேட்கலாம். (குறுக்கீடு) கேள்வி கேட்கும்போது கேட்கலாம். நீங்கள் நிகழ்ச்சிநிரலில் இருப்பதைப் படியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவலகங்களில் நிருவாகப் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம்" குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு குறித்த பணியாளர் மற்றும்

[திரு. கே.பி. முனுசாமி] [2013 மார்ச் 28

நிருவாகச் சீர்திருத்தத் துறையின் விவர அறிக்கையானது பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

அரசுப் பணிகளில் காலிப் பணியிடங்களில் பணியாளர்களை நியமிக்கும் அமைப்புகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், வேலைவாய்ப்பகங்கள் மற்றும் தேர்வுக் குழுக்கள் ஆகியவற்றின்மூலம் போட்டித் தேர்வு / நேர்முகத் தேர்வு ஆகியவற்றின்மூலம் தெரிவு செய்யப்பட்டு அப்பணியாளர்கள் காலிப் பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். மேலும், ஒவ்வொரு பதவிக்கான சிறப்பு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியமன முறையின் (Method of Recruitment) மூலமும் பதவிகள் நிரப்பப்பட்டு வருகின்றன.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பகம்மூலம் அரசுத் துறைகளில் 54,420 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் 13,581 பணியிடங்களும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் 64,435 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களும், 16,793 சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களும், 11,803 அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 16,963 பணியிடங்களும், கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 6,307 பணியிடங்களும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 5,489 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. பிற பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களில் 3,717 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

4. மேலும், 22,269 ஆசிரியர் பணியிடங்களும், 1,091 காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 4,042 பணியிடங்களும், கூட்டுறவு வங்கிகளில் 3,607 பணியிடங்களும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 10,105 காலிப் பணியிடங்களும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகத்தால் 2,159 மருத்துவர்கள் மற்றும் 4,000 செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.



2013 மார்ச் 28] [திரு. கே.பி. முனுசாமி]

5. எனவே, காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான பணி தொடர்ந்து நடைபெறுவதால் நிருவாகப் பணிகள் சிறப்பாக தொய்வின்றி நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** அதாவது, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல 2 இலட்சம் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. குறிப்பாக வேலைவாய்ப்பகத்திலேயே 470 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அரசுக்கு வருவாய் ஈட்டுகிற Commercial Tax Department–ல் 4,600 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. டாக்டர்கள், நர்சுகள், துப்புரவுப் பணியாளர்கள் என்று அத்தியாவசியப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. 2,000 கிராம நிருவாக அலுவலர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. தொழிலாளர் நலத்துறை போன்ற மிக முக்கியமான துறைகளிலே, அமலாக்கப் பிரிவுகளிலே காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. இந்தப் பணியிடங்கள் காலியாக இருப்பதன் காரணமாக நம்முடைய பணிகள் முடங்குகின்றன. மக்களுக்கு உரியது எதுவோ அது உரியநேரத்தில் கிடைக்காத நிலை ஏற்படுகிறது.

அதேபோல், பணியிலிருக்கும்போது இறந்தவர்களுடைய வாரிசுதாரர்கள், கருணை அடிப்படையில் அரசுப் பணியிடங்களிலே, பொதுத் துறை நிறுவனங்களிலே பணி கேட்டு 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள், 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள்கூட காத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இதிலே முன்னுரிமை கொடுத்து பணி வழங்க வேண்டுமென்றும், காலிப் பணியிடங்களை விரைவாக நிரப்ப வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஆட்சி வரலாற்றில் குறைந்த காலத்தில் அதிகப்படியான அரசு அலுவலர்களை நியமித்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு என்பதை நான் இந்த அவையிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு 22 மாத காலத்தில் அரசின் துறைகளிலுள்ள பல்வேறு நிலைகளில், பல்வேறு பணியாளர்களை 2 இலட்சம் பேரை பணியில் அமர்த்தியிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர், இதுபோன்ற கேள்விகள் கேட்கின்றபொழுது அரசுத் துறை செயல்பாடுகள் தொய்வடைந்திருக்கின்றன என்பதைச் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தே தவறான கருத்து. காரணம் கடந்த நிதிநிலை அறிக்கையையும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் நாம் ஒப்புநோக்குவோம் என்று சொன்னால், வருவாய் 15 விழுக்காடு கூடியிருக்கிறது என்று சொன்னால், ஆட்சியின் நிருவாகம் திறமையாகச் செயல்பட்ட காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 15 விழுக்காடு கூடியிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தினுடைய எல்லா மாநில அரசுகளையும் பார்ப்போம் என்று சொன்னால், பல்வேறு நிலைகளில் கடனிலே தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. மேற்கு வங்க மாநிலத்தைப் பார்ப்போம் என்று சொன்னால், அரசு கடனிலே தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 664 கோடி ரூபாயை உபரி வருவாயாகக் காட்டியிருக்கிறது. அது ஆட்சியினுடைய நிருவாகத் திறமை என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட நான் விரும்புகிறேன். நிருவாகம் சரியாக இருக்கின்ற காரணத்தினால்தான் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த மாநிலத்தில், அரசினால் சட்டமன்றத்தில் கொண்டுவரப்படுகின்ற திட்டங்கள் உரிய நேரத்தில் அரசாணைகளாக வெளியிடப்படுகின்றன. அப்படி அரசாணையாக வெளியிடப்பட்டு, குறிப்பிட்ட காலகட்டத்தில் மக்களுக்குத் தேவையான திட்டங்கள் சென்று அடையக்கூடிய நிலையிலே அந்தப் பணிகள் முடிக்கப்படுகின்றன என்று சொன்னால், நிருவாகம் சரியாக இருக்கின்ற காரணத்தினால்தான், பணியாளர்கள் முறையாக பணி அமர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால்தான் அது சிறப்பாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஓர்





உதாரணத்தைச் சொல்ல விரும்புகின்றேன். கடந்த நிதிநிலை அறிக்கையில், கல்வித் துறைக்கு 14,552 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியாண்டில் 16,965 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், கல்வித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் ஆசிரியர்களை நிரப்பிய காரணத்தினால் இந்த நிதிநிலை கூடியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தமிழக அரசினுடைய ஆட்சி முறை எந்த வகையிலும் தொய்வு இல்லாமல் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் இரண்டு இலட்சம் காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும், அரசினுடைய நிருவாகப் பணிகள் முழுமையாக, செம்மையாக நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்கள். அதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அரசுத் துறைகளில், வருவாய்த் துறை, தொழிலாளர் துறை, உள்ளாட்சித் துறைகளில் இன்னும் பணியிடங்கள் காலியாக உள்ளன. அந்தப் பணியிடங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டால், அரசு அறிவித்திருக்கின்ற நலத் திட்டங்களையும், இன்னும் இருக்கக்கூடிய பல்வேறு பணிகளையும் முழுமையாகச் செய்து மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிறோம். சுகாதாரத் துறையில்கூட அடிப்படைப் பணியாளர்கள் இல்லை. கருணை அடிப்படையில் பணியமர்த்தப்படுபவர்களும் பணியில் அமர்த்தப்படவில்லை. அதேபோல, செவிலியர்களைப் பணி அமர்த்தும்போது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுகிறார்கள். நேரடியாக நிரந்தரம் செய்யக்கூடிய பணிகளிலே அமர்த்தப்படுவதில்லை.

ஆதி திராவிடர்களுக்கான வயது வரம்பு 40 என்பதிலிருந்து 35 ஆக குறைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே பணியிலே

சேர்வதற்கான வாய்ப்பு இல்லாத சூழல் இருந்துகொண்டிருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் அரசினுடைய திட்டங்கள் முழுமையாக செயல்படுவதற்கு, காலிப் பணியிடங்களை முழுமையாக நிரப்புவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு முழுமையான பதில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக கருணை அடிப்படையிலே பணியில் அமர்த்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு அ. சவுந்தரராசன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களும் கேட்டிருக்கின்றார்கள். நீங்கள் செய்திகளைப் பார்த்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்குகிறார்களோ, அப்பொழுதெல்லாம் கருணை அடிப்படையிலே நிறைய பணிகள், உத்தரவுகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கரங்களால் கொடுக்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மருத்துவத் துறை குறித்து ஏற்கெனவே பதிலில் கூறி இருக்கிறோம். கடைசியாக பார்த்தோம் என்று சொன்னால், ஏற்கெனவே நிரப்பப்பட்ட பணியாளர்களோடு மேலும் 2,159 மருத்துவர்கள், 4,000 செவிலியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, நிருவாகத்திற்குத் தேவையான பணியாளர்கள் எங்கெல்லாம் பணியமர்த்தப்பட வேண்டுமென்று அரசு கருதுகிறதோ, அங்கெல்லாம் உடனடியாக பணியாளர்களை அமர்த்தி ஆட்சியினுடைய செயல்பாடுகள் மேலும் மேம்படும் வகையில்தான் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டங்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால் முழுவதுமாக காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். குறிப்பாக மருத்துவமனைகளில் D.G.O. மருத்துவர்கள் தொழில்நுட்பப் பணியாளர்கள் (Technicians), இரவு நேரக் காவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள், பள்ளிகளில் இரவு நேரக் காவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள், அதேபோன்று, உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களை முழுவதுமாக நிரப்ப வேண்டும். பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய சுகாதாரப் பணியாளர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. பற்றாக்குறை இருக்கிறது. அதேபோன்று, V.A.O. பணியிடங்கள், மிக முக்கியமான ஒன்று. அதில் 2,000 பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, இவற்றை முழுமையாக நிரப்ப வேண்டுமென்று அரசைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளில் பணியாளர்களைப் பணியமர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். இப்பொழுது, வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் அறிவியல்பூர்வமாக வளர்ச்சியடைந்திருக்கின்ற காரணத்தினால் புதிய, புதிய குப்பைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதுபோன்ற புதிய குப்பைகளை வெளியேற்றுவதற்கு உலகளாவிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாம் கேட்டிருக்கிறோம். அது வந்த பின்பு, அதன் அடிப்படையிலே எங்கெல்லாம் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமோ, அங்கெல்லாம் பணியமர்த்தப்பட்டு, எங்கெங்கெல்லாம் இயந்திரங்களின்மூலமாக குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ, அதற்கு ஏற்றாற்போல் திடக்கழிவு மேலாண்மைமூலம் அதற்கெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 மார்ச் 28

## 4. முன்பண மானியக் கோரிக்கைகள், 2013–2014, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள். 2013–2014 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.

2013–2014 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 21,11,60 | – | 50,00 |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 14,23,12 | – | – |
| 3. | நீதி நிருவாகம் | 302,27,02 | – | – |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 723,26,82 | 71,69,20 | 1 |
| 5. | வேளாண்மைத் துறை | 2,436,78,86 | 82,63,76 | 75,15,00 |
| 6. | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 423,00,92 | 72,38,66 | 1 |
| 7. | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 142,50,38 | 91,21,80 | – |
| 8. | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 44,46,92 | – | 1,46,07 |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 353,89,06 | 28,32,38 | 1 |
| 10. | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 146,51,92 | – | 1 |
| 11. | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 124,58,71 | – | – |
| 12. | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 213,25,30 | 114,98,40 | 3,83,94 |
அம்மா அவர்களது அரசு எல்லா வழிகளிலும் கடுமையான முயற்சிகளை எடுத்து, மின் பற்றாக்குறையை அகற்ற முயன்று வருகிறது. இதற்காக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக நிதியாதாரத்தை உறுதிப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

2012–2013 ஆம் ஆண்டில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு இந்த நிறுவனத்திற்கு அளித்த நிதி 11,242 கோடி ரூபாய். 2013–2014–ல் அளிக்கவுள்ள நிதி 12,197 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இது அரசின் வரி வருவாயில் 14.17 சதவிகிதம் என்பதைக் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதுவரை எந்த அரசாலும் இந்த அளவிற்கு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதி உதவி செய்யப்படவில்லை என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்கள், இந்த நாட்டின் வருங்கால மன்னர்கள் என்று பலர் சொன்னார்கள். ஆனால், அவர்கள் மன்னர்கள் ஆவதற்கான அத்தனை திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மாணவ, மாணவிகளைப் பெற்றெடுப்பதுதான் அவர்களின் அம்மா; அவர்களை உயர்த்தி விடுவதெல்லாம் நம் இதய தெய்வம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் வீட்டையும் காக்க வேண்டும்; நாட்டையும் காக்க வேண்டும் என்று நினைப்பவர்தான் நம் அம்மா! அதனால்தான் நேற்றையதினம் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகிய மாணவ, மாணவியர் தங்களுடைய அறப்போராட்டத்தைக் கைவிட்டு, கல்வியில் கவனம் செலுத்தி, பெற்றோருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று நம் அம்மா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அது தாயுள்ளத்தோடு விடுக்கப்பட்ட வேண்டுகோள். மாணவ சமுதாயத்தின்மீது மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும், பாசத்தையும், மாணவச் செல்வங்கள் என்றைக்கும் மறந்துவிட மாட்டார்கள் என்பதை நான் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

பிற்பகல் 12–05

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே மத்திய அரசு மனிதாபிமானமே இல்லாமல் நடந்து கொண்டபோதும், இலங்கையிலே தமிழ் இனம் அழிக்கப்பட்டபோதும், தனது சுய நலத்துக்காக, தனது வாரிசுகளின் வளமான வாழ்வுக்காக வாய்மூடிக் கிடந்தவர் கருணாநிதி! மத்திய அரசிடம் மண்டியிட்டுக் கிடந்தவர் கருணாநிதி! “காரே களவு போன பின்னால் கார் ஷெட்டை பூட்டி வச்சானாம் ஒருத்தன்; அந்த அதிமேதாவியைப்போல இலங்கையிலே தமிழ் இனம் கொன்று குவிக்கப்பட்ட பிறகு, மத்திய அரசுக்குக் கொடுத்த ஆதரவை வாபஸ் வாங்கியிருக்கிறார் கருணாநிதி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தனக்காக வாழாமல் தமிழர்களுக்காகவே வாழும் தங்கத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது முறையாக முதலமைச்சரானவுடனேயே ராஜபக்ஷே போர்க் குற்றவாளி என்றும், இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி வெற்றிச் சரித்திரம் படைத்தவர் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரபாகரனின் மகன் பச்சிளம் பாலகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழ் மண்ணில் நடைபெறுகின்ற கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாட அனுமதிக்க மாட்டோம் என்று தமிழ் உணர்வோடு தடை போட்டார்கள் நம் அம்மா அவர்கள். “இலங்கை நாட்டை ‘நட்பு நாடு’ என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும்” என்று நேற்று இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்தார்கள். இப்படி ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வருகின்ற துணிச்சல் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) யாருக்கு இருந்தது? மாண்புமிகு நம் அம்மா அவர்களுக்கு மட்டும்தான் இருந்தது! (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு இருந்ததா? இல்லை.

இலங்கை இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை, போர்க் குற்றங்கள் குறித்து, சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கருணாநிதி முதலமைச்சராக இருக்கும்போது கொண்டு வந்தாரா? அவருக்கு அந்த தைரியம் இருந்ததா? இல்லை.



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அந்த தைரியமும், தமிழ்ப் பற்றும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

“தமிழ் ஈழத்திற்காக இலங்கைவாழ் தமிழர்களிடம் இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்; அதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று தீர்மானம் கொண்டுவர முதலமைச்சராக இருந்த கருணாநிதிக்கு திராணி இருந்ததா? இல்லை; கருணாநிதிக்கு திராணியும் இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) தனக்குத் திராணி இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளும் சிலர் தற்போது இந்த அவையிலும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஈடாக இலங்கைத் தமிழர்கள்மீது அக்கறை கொண்ட தலைவர்கள் யாருமே இல்லை, இல்லை என்ற நிலைதான் இப்பொழுது இருக்கிறது.

மத்திய அரசு மக்களின் நலனைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை; பொருளாதார வளர்ச்சியைப் பற்றி அக்கறைப்படுவதே இல்லை; எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களை மதிப்பதே இல்லை; நியாயமாகக் கொடுக்க வேண்டிய உரிமைகளையும் கொடுப்பதே இல்லை என்பதெல்லாம் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகத் தெரிகிறது. “மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார், தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்” என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்தில் பாடினாரே! அப்படிப்பட்ட சுயநலவாதிகள் மத்திய அரசிலே பங்கு பெற்றிருந்தபோது தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை அந்த இலட்சணத்தில்தான் இருக்கும். ஆனால், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மக்கள் நலனைப் பற்றி கவலைப்படுகிற அரசு; பொருளாதார வளர்ச்சி பற்றி அக்கறைப்படுகிற அரசு. அதனால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள், மத்திய அரசு எத்தனை தடைகள் ஏற்படுத்தினாலும், அதையெல்லாம் உடைத்தெறிந்து தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

தி.மு.க. ஆட்சியிலே சிதைந்துபோன சட்டம்–ஒழுங்கு அம்மா அவர்களின் ஆட்சியிலே சீர்செய்யப்பட்டது. தேவையான வசதிகளை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

காவல் துறைக்கு ஏற்படுத்திக்கொடுத்து, காவலர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்பட்டது. இந்தியாவிலேயே அமைதியோடும், நிம்மதியோடும் பெண்கள் பயமில்லாமல் வாழ்வதற்கு ஏற்ற மாநிலம் தமிழ்நாடுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமை தமிழகத்திற்குக் கிடைக்கக் காரணம் மாண்புமிகு நம் அம்மா அவர்கள்தான்.

காலிப் பணியிடங்களை நிரப்ப விரைவான நடவடிக்கைகள் எடுத்ததையும், இந்த நிதியாண்டில் 2 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அறிவிப்பையும், பலன் அடைந்தவர்களும், பலன் அடைய இருப்பவர்களும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்காகப் பாடுபடாதவர்கள் மட்டும் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்காக மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம், படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு கிராமங்களில் வசிப்போரை மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறது.

இளைஞர்கள் எல்லாம் எங்கள் பக்கம்தான், இளைஞர்களின் ஆதரவு எங்களுக்குத்தான், இளைஞர்கள் எங்களிடம்தான் இருக்கிறார்கள் என்று சிலர் சொன்னார்கள், சொல்லிக்கொண்டும் இருக்கிறார்கள். உண்மையில் அப்படிச் சொல்பவர் 60–ஐக் கொண்டாடிய இளைஞர்! (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குப் பின் இருப்பவர்களும் 60–ஐ எட்டிப்பிடிக்கின்ற இளைஞர்கள்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உண்மையிலேயே இளைஞர்கள் இருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், இளைஞர்களின் வளர்ச்சியைப் பற்றி, அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி நினைப்பவர், அக்கறைபடுபவர், அதற்காகத் திட்டங்கள் வகுப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களுடைய திறமைகளை ஒருமுகப்படுத்த, உற்பத்தி ஆற்றலை உயர்த்த, அதிக வருவாய் தரக்கூடிய பணிகளை மேற்கொள்வதற்காக அவர்களுக்குத் திறன் வளப் பயிற்சி அளிப்பதற்காக 75 கோடி ரூபாய் வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள், அதனை இந்த நிதியாண்டில் 100 கோடி ரூபாயாக உயர்த்தி இருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த உள்ளத்திற்கு உதாரணம் என்று இளைஞர்கள் எழுச்சியோடு சொல்கிறார்கள்.



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வடிவமைக்கப்பட்ட திறன் பயிற்சியை அளிக்க 8 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கும், சுய வேலைவாய்ப்புகளை அளித்திடுவதற்கான பயிற்சி அளிக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கும், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இளைஞர்கள், நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் என்று அவர்கள் பூரித்துப்போய் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்த 10 ஆண்டுகளில் 15 இலட்சம் கோடி ரூபாய் மொத்த முதலீடுகள் பெறுவதைத் தொலைநோக்குத் திட்டம், 2023 இலக்காகக் கொண்டுள்ளதையும், இந்த நிதியாண்டில் கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்காக 2 ஆயிரம் கோடி ரூபாயும், திட்ட வடிவமைப்புக்காக 200 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதைத் தொலைநோக்குத் திட்டம், 2023–ன் அருமை தெரிந்தவர்கள் அளவில்லாமல் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

வேளாண் துறை செழித்து வளர வேண்டும், அதில் ஈடுபட்டவர்களின் இல்லங்களிலெல்லாம் மகிழ்ச்சி நிறைய வேண்டும் என்று நினைக்கின்ற முதல்வராக மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் யாராலும் அழிக்க முடியாத புகழோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்று வேளாண் பெருமக்கள் பெருமிதத்தோடு பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

“நல்ல செயலை விதையுங்கள், நல்ல பழக்கம் உருவாகும். நல்ல பழக்கத்தை விதையுங்கள், நல்ல குணம் உருவாகும். நல்ல குணத்தை விதையுங்கள், நல்ல எதிர்காலம் உருவாகும்” என்று ஃபோர்டுமேன் என்ற அறிஞன் சொன்னான். அந்த அறிஞன் சொன்னதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகள் நிலையான வருவாய் ஈட்டுவதற்கு கால்நடை வளர்ப்பும் காரணமாக இருக்கின்றது. அதனால்தான் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,082.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தீவனப் பெருக்கத்திற்கான நிதி 25 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கால்நடை மருத்துவத் துறை கட்டமைப்பை வலுப்படுத்த 235

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

கோடி ரூபாய், கால்நடை மருத்துவமனைகளுக்குக் கட்டடங்கள் அமைக்க 115 கோடி ரூபாய், கால்நடைத் தீவன உற்பத்தித் தொழிற்சாலையைப் புனரமைக்க 14 கோடி ரூபாய், இப்படி அடுக்கடுக்கான அறிவிப்புகள்.

பிற்பகல் 12–15

பிறரிடம் அன்பு காட்டுவதில் பெண்கள்தான் சிறப்பானவர்கள். உலகத்தில் அன்பைப் பரப்புவதற்காகவே கடவுள் பெண்களைப் படைத்தான் என்று சொல்வார்கள். மனிதர்களிடம் மட்டுமல்ல, கால்நடைகளிடமும்கூட அன்பு காட்டும் கருணை மனத்தோடு கடவுள் மாண்புமிகு அம்மா அவர்களைப் படைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஒருநாள் போவார் ஒருநாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்,
ஒரு சாண் வயிரை வளர்ப்பவன் உயிரை ஊரார் நினைப்பது சுலபம்"

என்று மீனவர்களின் வாழ்க்கையைப் பற்றி ஒரு திரைப்படத்தில் நமது புரட்சித் தலைவர் அவர்கள் பாடினார்கள். மீனவர்களின் இந்தத் துயர நிலையை மாற்றி, இன்று மீனவர்களைக் காப்பாற்றுகின்ற தெய்வமாக! அவர்களைக் கரை சேர்க்கின்ற காவல் தெய்வமாக! மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நிஜக் கண்ணீர் வடிக்கும் மீனவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்தது முந்தைய தி.மு.க. அரசும், அவர்கள் பங்கு பெற்றிருந்த மத்திய அரசும். ஆனால், மீனவர்களுக்கு ஒரு இன்னல் என்றால், சிங்களக் கடற்படையினரால் ஒரு ஆபத்து என்றால், மின்னல் வேகத்தில் அதைத் தடுக்கின்ற தாயாக, மீனவர்களை மீட்கின்ற தாயாக, மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படும் தமிழக மீனவர்களுக்காக கருணாநிதி அடிக்கடி அறிக்கை விடுகிறார். தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக இருந்த கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தவரே கருணாநிதிதான்! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்கள் இன்றைக்குப்படுகின்ற அத்தனைத் துன்பங்களுக்கும் காரணமே கருணாநிதிதான்.



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இது எதைக் காட்டுகிறது என்றால், "கொலை செய்தவனே மலர் வளையம் வைத்து கண்ணீர் சிந்துவது போல" துரோகம் செய்வதையும் செய்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார் பாவம் கருணாநிதி. தனது குடும்பங்கள் வளமாக இருப்பதற்காக சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று போராடிய கருணாநிதி, மத்திய அரசை வலியுறுத்திய கருணாநிதி, கச்சத் தீவை மீட்பதற்காக மத்திய அரசிடம் போராடினாரா? வலியுறுத்தினாரா? இல்லை, தன் குடும்பம், தன் குடும்பம் வளம் பெற நினைத்த கருணாநிதி மீனவர் குடும்பங்கள் நலம் பெற நினைத்தாரா? இல்லை. ஆனால், மீனவர்களுக்காக மத்திய அரசோடு வாதாடி, போராடி, மீண்டும், மீண்டும் குரல் கொடுக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் கச்சத் தீவையும் மீட்டுத் தருவேன் என்று இந்த மாமன்றத்திலே சூளுரைத்திருக்கிறார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) வராத காவேரியையே வரவைத்த மாண்புமிகு அம்மா அவர்கள், கச்சத் தீவை மீட்க மாட்டாரா! நிச்சயம் மீட்டுத் தருவார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நம்பிக்கை மீனவர்களுக்கு மட்டுமல்ல, தமிழக மக்கள் அனைவருக்கும் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீனவர்களின் மன வலியும் தெரியும், கச்சத் தீவை மீட்பதற்கான வழியும் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் மாதந்தோறும் தருகிற 20 கிலோ விலையில்லாத அரிசியால் இலட்சக்கணக்கான குடும்பங்களின் வயிறு நிறைந்திருக்கிறது. துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றையும் மானிய விலையில் வழங்குவதால் தாய்மார்களின் மனதும் நிறைந்திருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 4,900 கோடி ரூபாய். இதைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்? மத்தியில் ஆட்சி செய்வது மக்களை ஏமாற்றுகிற கை; தமிழ்நாட்டில் ஆட்சி செய்வது மக்களுக்கு அன்னமிட்ட கை (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஏழைக் குடும்பங்கள் எல்லாம் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் பதில் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் யதார்த்தமாகப்

[பேரவைத் தலைவர்] [2013 மார்ச் 28

பேசிக் கொண்டு இருக்கிறார். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். எதுவாக இருந்தாலும் பதிலுரை முடிந்தவுடன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பதிலுரையை முடித்ததற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். மத்தியில் ஆட்சி செய்வது மக்களை ஏமாற்றுகிற கை; தமிழ்நாட்டில் ஆட்சி செய்வது மக்களுக்கு அன்னமிட்ட கை என்று ஏழைக் குடும்பங்கள் எல்லாம் குதூகலித்துக் கொண்டிருக்கின்றன. மத்தியிலே இருக்கும் கை ஏமாற்றவும் செய்கிறது, பெட்ரோல், டீசல் விலையை அடிக்கடி ஏற்றவும் செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், மத்தியில் இருக்கும் கை பெட்ரோல், டீசல் விலையை அடிக்கடி உயர்த்துகிற கை மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெயின் அளவை அடிக்கடி குறைக்கின்ற கை ஆகவும் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த 52,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை இப்போது அவர்கள் மாதத்திற்கு வெறும் 29,000 கிலோ லிட்டர் என்று குறைத்திருக்கிறார்கள். நேற்றுதான் அந்த அறிவிப்பு என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் நாங்கள் இப்போது அதைப்பற்றிக் கூட்டம் போட்டு விவாதிக்க இருக்கிறோம். ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை 50 சதவீதம் அளவிற்குக் குறைத்து தமிழ்நாட்டைப் பழி வாங்குகிற கைதான் மத்தியிலே இருக்கின்ற கை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நம்பி ஓட்டுப் போட்டவர்களை எல்லாம் . . . (குறுக்கீடுகள்)



2013 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். கடைசியில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. கே. கோபிநாத், திரு. என்.ஆர். ரெங்கராஜன், திருமதி எஸ். விஜயதரணி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பி ஓட்டு போட்டவர்களை எல்லாம் ஒழித்துக் கட்டும் வேலையை மத்திய அரசு நன்றாகவே செய்து வருகிறது. ஆனால், ஓட்டுப் போட்டவர்களை எல்லாம் உயர்த்துகிற வேலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து வருகிறது. கடந்த தி.மு.க. ஆட்சியில் சொந்த பந்தங்களைப் பாதுகாக்க பாடுபட்டார்களே அன்றி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் பாடுபடவில்லை. வாரிசுகளை வளர்க்கப் பாடுபட்டார்களே தவிர, வனங்களை வளர்க்கப் பாடுபடவில்லை. நாட்டைப் பற்றியே கவலைப்படாதவர்கள் காட்டைப் பற்றியா கவலைப்படப் போகிறார்கள்? ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் வனங்களைப் பாதுகாப்பதற்கும், இயற்கை வளங்களை வளர்ப்பதற்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் தாயுள்ளத்தோடு தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

உண்மையான பசுமைப் புரட்சியை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டும்தான் முடியும் என்பதை இந்த நிதிநிலை நிரூபித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் துறை என்பதை தங்களை வளர்க்கும் துறையாகவே தி.மு.க. அரசு நினைத்தது. ஆனால், அது நம் மாநிலத்தை வளர்க்கும் துறை என்று நினைப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருக்கும்பொழுதெல்லாம் தொழில் துறை தலைநிமிர்ந்து நிற்கிறது. கருணாநிதி ஆட்சி வரும்பொழுதெல்லாம் அவர்களது கட்சியைப் போலவே தடுமாறி நிற்கிறது.

தொழிற்சாலைகளில் இருந்தவற்றை வெறும் இயந்திரங்களாக நினைப்பவர் கருணாநிதி. தமிழ்நாட்டின் இதயங்களாக நினைப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெளி மாநிலத்தில் இருந்தோ, வெளிநாட்டில் இருந்தோ வருபவர்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் தொழில் தொடங்கினால் அது தமிழ்நாட்டிற்கு வசந்த காலம். கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் தொழில் தொடங்கினால்–அது அவர் குடும்பங்களுக்குத்தான் வசந்த காலம்–தமிழ்நாட்டிற்கு அது கசந்த காலம். இதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சீரழிந்துபோன துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்று. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சீரழிந்துபோன துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்று. இப்படிச் சொன்னால் எந்தத் துறைதான் சீராக இருந்தது என்று மக்கள் நம்மைக் கோபித்துக் கொள்வார்கள்.

சிலருக்குச் சர்க்கரை வியாதி இருக்கும்; சிலருக்கு இரத்தக் கொதிப்பு இருக்கும்; சிலருக்கு கண் பார்வை குறைவாக இருக்கும்; சிலருக்கு காது சரியாகக் கேட்காமல் இருக்கும்; சிலருக்கு இதயம் பாதித்திருக்கும்; சிலருக்கு கிட்னி பழுதடைந்திருக்கும்; நான் சொல்லுகின்ற அத்தனை வியாதிகளும் ஒரே மனிதனுக்கு இருந்தால் எப்படி இருக்கும்? தி.மு.க. ஆட்சியிலே தமிழ்நாடு இருந்ததுபோல் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க. ஆட்சியிலே எல்லாத் துறைகளுமே சீரழிந்து போயிருந்தன. அவற்றைச் சீர்படுத்தும் வேலைகளைச் சிறப்பாகச் செய்து கொண்டிருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். புதிய புதிய பேருந்துகள் எல்லாம் சாலையை அலங்கரிப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். பண்டிகை காலங்களில் சொந்த ஊர்களுக்குக் குடும்பத்தோடு சென்று கொண்டாடி மகிழ்ந்துவிட்டு திரும்பி வர தாராளமாகப் பேருந்துகள் விடப்படுவது நம் தாயின் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கை குறித்து பல்வேறு கருத்துகளைப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் "இந்த வரவு–செலவுத் திட்டத்தை வரி அல்லாத வளர்ச்சி பட்ஜெட்" அதாவது "Tax Free Growth Budget" என்றும், மதுரை–தூத்துக்குடி தொழில் வழிப்பாதை அமைத்தல், சென்னையில் கட்டப்படவுள்ள மேம்பாலங்கள், மீன் வளத் துறைக்கான திட்டங்கள், விலைவாசியைக் கட்டுப்படுத்த வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் போன்றவை பற்றி பாராட்டி கருத்து தெரிவித்துள்ளது.



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 12–25

மேலும், "Prudent Fiscal Management to achieve Target" என்ற கருத்தையும் தெரிவித்துள்ளது. அதேபோல், ஹிந்து நாளிதழ் "Revenue surplus Budget again" என்று குறிப்பிட்டு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் உள்ள பல்வேறு அம்சங்களையும், குறிப்பாக, மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டு ஆணையத்தை அமைப்பது குறித்தும், மாநில போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கு அமைக்கப்படவுள்ள குழு பற்றியும், விவசாயத் துறைக்கு, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது குறித்தும் குறிப்பிட்டுள்ளதோடு, தென் மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க சிறப்பு உதவிகள் வழங்கவுள்ளதைப் பற்றியும் குறிப்பிட்டு "Big cheer for southern Tamilnadu" என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல, நிதிநிலை அறிக்கையில் நகர்ப்புற மேம்பாட்டிற்குச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும், குறிப்பாக திடக்கழிவு மேலாண்மைக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் பற்றியும், உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ள சாலை மேம்பாட்டுத் திட்டம் பற்றியும் செய்திகளை வெளியிட்டுள்ளது.

அதேபோல், Deccan Chronicle நாளிதழ் "Tax Free TN Budget Unveils Roadmap for Development" என்ற தலைப்பிலும், Thumps up to no Tax Budget – Boost to Development Infrastructure என்ற தலைப்பிலும், நிதிநிலை அறிக்கையின் பல்வேறு அம்சங்களைப் பாராட்டி கருத்து தெரிவித்துள்ளது இதே பத்திரிகை. Focus on Road, Power, Special Package to revive MSM Enterprises – Boost to Growth Projects என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளது.

Business Standard பத்திரிகை "Tamil Nadu Presents Tax–Free, Revenue Surplus Budget என்ற தலைப்பிலும், Business Line பத்திரிகை "Tamil Nadu Budget: Strong Revenue Backs Infrastructure Thrust – Boost to Farm Infrastructure; no New Taxes" என்ற தலைப்பிலும் செய்திகளை வெளியிட்டுள்ளன. இதேபோல், பல்வேறு பத்திரிகைகளும் குறிப்பாக, தமிழ் நாளேடுகளும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி கருத்துகளை வெளியிட்டுள்ளன.

இந்திய தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) இந்த வரவு-செலவுத் திட்டத்தை "It is Progressive and Growth Oriented" என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளது. குறிப்பாக மின்சார

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

கட்டமைப்பிற்கும், உற்பத்திக்கும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்துவரும் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளது. (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவைக்குள் வந்து அமர்ந்தார்.)

சரி விடுங்கள், விடுங்கள். இருக்கட்டும் பாவம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்களது இருக்கைக்கு அருகே சென்றார்.) (குறுக்கீடு)

திரு. அ. கணேஷ்குமார், பாவம் அவரை விடுங்கள், ஏன் அவரை வெளியேற்றுகிறீர்கள்.

பொதுவாக, கடுமையான பொருளாதார சூழ்நிலை நிலவிவரும் இத்தருணத்திலும், புதிய வரிகள் எதுவும் இல்லை, ஏற்கெனவே உள்ள வரி விகிதங்களில் எந்த உயர்வும் இல்லை என்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முடிவினைப் பல்வேறு தரப்பினரும் வெகுவாகப் பாராட்டி கருத்து தெரிவித்துள்ளனர்.

2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கை மீது ஆக்கபூர்வமான கருத்து தெரிவித்துள்ள அனைத்து பத்திரிகைகளுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தருணத்தில் ஒரு கருத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பிப்ரவரி மாத இறுதியில், மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் பல்வேறு புதிய வரிகளும் விதிக்கப்பட்டன. செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களுக்கான ஒதுக்கீட்டு நிதியைக் கணிசமாகக் குறைத்து அந்த மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இதற்கு நேர்மாறாக கடுமையான பொருளாதாரத் தாக்கம் மாநில அரசின் நிதிநிலையில் இருந்தபோதிலும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கான நிதியொதுக்கத்தைக் குறைக்காமலும், கூடுதல் வரி எதுவும் விதிக்காமலும் இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தாக்கல் செய்துள்ளது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால். . . (குறுக்கீடு)



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்தான் அவரைக் கிளப்பிவிட்டார் போலிருக்கிறது.

பிற்பகல் 12–30

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 2012–2013 ஆம் ஆண்டில்கூட, வரவு–செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு (Budget Estimate) 1,20,422 கோடி ரூபாயாக இருந்ததை, திருத்திய வரவு–செலவுத் திட்டத்தில் (Revised Estimate) 1,21,666 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளதே தவிர, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை திருத்திய மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குறைக்கவில்லை என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த Budget–ல் இதுதான் முக்கியமான விஷயம். சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு இதில் பதில் இருக்கிறது.

ஒருசில மாமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசும்போதுகூட திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது; ஆனால், அவை முழுமை பெறுவதில்லை என்று தெரிவித்தார்கள். எந்தத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்படும் நிதி அப்பணியை நிறைவு செய்வதற்கு முழுமையான அளவு ஒதுக்கப்படும் என்பதையும், நிதிப் பற்றாக்குறை என்ற ஒரு சூழ்நிலை திட்டச் செயலாக்கத்தில் ஏற்படாது என்பதையும், செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதியைக் குறைக்கின்ற நிலை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது தலைமையிலான இந்த அரசுக்கு என்றும் ஏற்படாது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நடப்பாண்டினுடைய 2012–2013 Budget Estimate–க்கும் Revised Estimate–க்கும் உள்ள முன்னேற்றம்.

வரவு–செலவுத் திட்டத்தின்மீது பல்வேறு தலைவர்களும் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. தா. பாண்டியன் அவர்கள் இந்த வரவு–செலவுத் திட்டம், வரிகள் போடாமல் கொண்டுவரப்பட்ட உபரி வரவு–செலவுத் திட்டம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், புதிய வரிகள் ஏதுமின்றி தாக்கல்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

செய்யப்பட்டுள்ள பட்ஜெட் என்றும், விலைவாசியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கவை என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

இவர்கள் தவிர, திரு. அ. சவுந்தரராசன், திரு. எம். ஆறுமுகம், திரு. ரா. சரத்குமார், முனைவர் செ.கு. தமிழரசன், திரு. பி.வி. கதிரவன், திரு. உ. தனியரசு, டாக்டர் க. கிருஷ்ணசாமி, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா போன்ற மற்ற தலைவர்களும் தங்களது கருத்துகளை இம்மாமன்றத்தில் நன்கு தெரிவித்துள்ளனர். ஒருசில தலைவர்கள் அரசியல் காரணங்களுக்காக வரவு–செலவுத் திட்டம் பற்றிய ஒரு மேம்போக்கான அரசியல் விமர்சனத்தை முன்வைத்துள்ளனர்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை, விமர்சனங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவை ஆக்கப்பூர்வமானவையாக இருப்பின் நாங்கள் மனதார வரவேற்கிறோம். ஆனால், அரசியல் காரணங்களுக்காக, ஏதோ கருத்து சொல்ல வேண்டும் என்பதற்காக, வெளிப்படுத்தப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கைமீது அத்தகைய ஆக்கப்பூர்வமான கருத்துகளைத் தெரிவித்துள்ள அரசியல் தலைவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரவு–செலவுத் திட்டத்தில், கடந்த 25–3–2013 முதல் தொடங்கப்பட்ட விவாதத்தில் இதுவரை இம்மாமன்றத்தில் 25 உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அவர்கள் நிதிநிலை அறிக்கையில் வரவேற்கத்தக்க பல்வேறு அம்சங்களைக் குறிப்பிட்டு பாராட்டு தெரிவித்ததோடு, சில ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் எடுத்துரைத்துள்ளனர்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்று, தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக வருவாய் உபரி உள்ள நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து வருகிறது. 2010–2011-ஆம் ஆண்டில், அதாவது தி.மு.க. ஆட்சியில், வருவாய் பற்றாக்குறை 2,728.69 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு, தமிழக அரசின் நிதிநிலையைச் சீரமைத்து 2011–2012-ஆம் ஆண்டில் 1,364 கோடி ரூபாய் வருவாய் உபரி



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கொண்டுவரப்பட்டது. 2012–2013-ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டின்படி 451.52 கோடி ரூபாய் வருவாய் உபரி. 2013–2014-ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 644.06 கோடி ரூபாய் வருவாய் உபரியுடன் நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அளித்துள்ளது. இதுபோலவே, நிதிப் பற்றாக்குறை, தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமை சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீதத்திற்குக்கீழ் தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சதவீதம் 2011–2012–ல் 2.97 ஆக இருந்தது. 2012–2013–ல் இது 2.88 ஆக இருக்கும். 2013–2014–ல் இந்த அளவு மேலும் குறைக்கப்பட்டு, 2.84 சதவீத அளவில் கட்டுப்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விவேகமான தலைமையில் செயல்பட்டுவரும் இந்த அரசால் வரி வருவாய் முறையாக வசூலிக்கப்பட்டு, அதைத் திறம்பட நிர்வகிப்பதே இதற்கு முக்கியக் காரணமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் இங்கே பேசும்போதுகூட வரி வருவாய் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்தார். நடப்பு ஆண்டின் வரி வருவாய்க்கும், 2013–2014-ஆம் ஆண்டு கணிக்கப்பட்டுள்ள வரி வருவாய்க்கும், 17 சதவீதம் வளர்ச்சி விகிதம் காட்டப்பட்டுள்ளது என்றும், தற்போது உள்ள பொருளாதார வளர்ச்சி 4.61 சதவீதம் உள்ள நிலையில், இது எப்படி சாத்தியம் எனவும் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார்.

2012–2013-ஆம் ஆண்டில் மந்தமான பொருளாதார நிலையிலும், நமது மாநிலம் வரி வருவாயில் எட்டியுள்ள வளர்ச்சி, ஜனவரி 2013 இறுதி வரை 21.8 சதவீதம். இந்நிலையில், அடுத்த ஆண்டிற்கு கணிக்கப்பட்டுள்ள 17 சதவீதம் என்பது மிகச் சரியாக கணிக்கப்பட்ட அளவு என்றும், இது எட்டக்கூடிய கணிப்புதான் என்றும் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும், 2012–2013 ஆம் ஆண்டிற்கு 4.61 சதவீதம் வளர்ச்சி என்பது நிலையான விலை விகிதத்தின்படி (Constant Prices) கணிக்கப்பட்ட வளர்ச்சி விகிதம். பொருளாதார வளர்ச்சி, வரி வருவாய் போன்றவை, தற்போதைய விலை விகித மதிப்பீட்டின் அடிப்படையில் (Current Prices) கணக்கிடப்படுபவை. அதன்

அடிப்படையில் உள்ள வளர்ச்சி விகிதம் 2012—2013 ஆம் ஆண்டிற்கு 13.16 சதவீதம் என்பதால் 17 சதவீதம் வரி வருவாய் என்பது சாத்தியமான ஒன்றுதான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுதவிர, பொருளாதார வளர்ச்சி விகிதம் ஒருபுறம் இருந்தாலும், மாநில அரசு வழங்கிவரும் பல்வேறு நலத் திட்ட உதவிகளால் மக்களின் நுகர்வு அளவு சரியாமல் நிலை நிறுத்தப்பட்டுள்ள காரணத்தால், தற்போது வரி வருவாய் தொடர்ந்து சாதகமான நிலையில் உள்ளது என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது வரி வருவாய் வளர்ச்சி 17 சதவீதம் என்பது எட்டக்கூடிய ஒன்றுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர், அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வெளியிடும்வரை பொறுமை காத்து, தனது ஐயப்பாட்டினை நீக்கிக்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசும்போது, இந்த நிதிநிலை அறிக்கையில் உப்பு, சப்பில்லை என்று குறிப்பிட்டார். இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. கிராமப்புறங்களில் "காமாலைக் கண்ணுக்கு காண்பதெல்லாம் மஞ்சள்" "காய்ச்சல் நோய்க்காரனுக்கு சாப்பிடுவதெல்லாம் கசப்பு" என்று பழமொழிகள் சொல்வார்கள். இதைத்தான் நாம் அவர் பேச்சிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. திரு. எ.வ. வேலுவுக்கும், அவர் சார்ந்திருக்கும் தி.மு.க.—வுக்கும் அப்படிப்பட்ட காய்ச்சல் நோய் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காய்ச்சல் சாதாரணமான காய்ச்சல் இல்லை. அற்ப பதவி சுகத்திற்காக, அன்று ஈழத் தமிழனைக் காட்டிக்கொடுத்த ஈனச் செயலை இன்று எப்படியாவது மக்களை மறக்க வைத்துவிட வேண்டும் என்று எண்ணுகின்ற "ஏமாற்றுக் காய்ச்சல்", (மேசையைத் தட்டும் ஒலி) எதை வேண்டுமானாலும் இழக்கலாம், ஆனால் அதிகாரத்தை மட்டும் இழந்துவிடக் கூடாது என்று எண்ணும் "அதிகாரக் காய்ச்சல்"; பதவி போய்விட்டதே என்று பரிதவித்துப் பதைபதைக்கும் "பதவிக் காய்ச்சல்"; மக்கள் குரலுக்கு நான் செவிசாய்க்க மாட்டேன், நான் சொல்வதைத்தான் மக்கள் கேட்க வேண்டும் என்று சொல்லுகிற "ஆணவக் காய்ச்சல்"; அலைக்கற்றை ஊழலை மக்களுக்குத் தெரியாதபடி மறைத்துவிடலாம் எனத் துடிக்கும் "அமுக்குக் காய்ச்சல்", (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மாண்புமிகு அம்மா





அவர்கள் மத்திய அரசிதழில் வெளியிட வைத்துவிட்டார்களே எனத் தவிக்கும் "ஆதங்கக் காய்ச்சல்"; (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காய்ச்சலால்தான் வாய் கசந்துபோய் உப்பு சப்பு அறியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் திரு. எ.வ. வேலு அவர்கள். இந்த காய்ச்சலுக்கு ஒரே ஒரு மருந்துதான் இருக்கிறது. அந்த மருந்தை தி.மு.க.—வுக்கு கடந்த சட்டமன்ற தேர்தலின்போது மக்களாகிய மருத்துவர்கள் நன்றாகவே கொடுத்தார்கள். ஆனால், காய்ச்சல் இன்னும் குறைந்தபாடில்லை. எனவே, அந்த மருந்தை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கொஞ்சம் டோஸை அதிகப்படுத்தி, மீண்டும் கொடுத்து தி.மு.க.—வை நிரந்தர ஓய்வெடுக்க அனுப்பி வைப்பார்கள் மக்கள். இது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—40

இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக திரு. க. பாலகிருஷ்ணன், திரு. சு. குணசேகரன் போன்றவர்கள், அரசின் கடன் அளவைப் பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன், மாநில அரசின் கடன் கட்டுப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில்தான், ஒவ்வோர் ஆண்டும் நமக்கு மத்திய அரசால் அனுமதிக்கப்படும் கடன் அளவை முழுமையாகப் பெற வாய்ப்பு இருந்தும், அதைவிட குறைவான அளவிலேயே, கடன் பெற்று வருகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

2012—2013-ஆம் ஆண்டில்கூட நமக்கு அனுமதிக்கப்பட்ட கடன் அளவு 20,716 கோடி ரூபாயாக இருந்தபோதிலும், நம்முடைய அரசு பெற்ற நிகர பொதுக் கடன் அளவு 15,675 கோடி ரூபாய் மட்டுமே. கடன் பெறாமல், எந்த ஒரு அரசும் நிருவாகத்தை நடத்த முடியாது. அமெரிக்கா உள்பட மேற்கத்திய நாடுகள்கூட கடன் பெற்றுத்தான் பல கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. ஏன், இந்திய அரசும்கூட கணிசமான அளவு கடன் பெற்றுத்தான் கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. எனவே, கடன் பெறுவது என்பது தவறு அல்ல. ஆனால் அவ்வாறு பெறப்படுகின்ற கடன் எந்த அளவில் உள்ளது என்றும், எதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் பொறுத்தே இதில் முடிவாக எதையும் கூற முடியும். அதாவது பெறும் கடன், நீண்டகால கட்டமைப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும், அந்தக் கடன் அளவு அரசால் திரும்பச் செலுத்துகின்ற நிலையில் உள்ளதா என்பதையும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

பொறுத்தே கடன் பெறுவது சரியா, தவறா என்பதைக் கூற முடியும். கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலையில் அரசு உள்ளதா, இல்லையா என்பதை உறுதிப்படுத்தும் வகையில்தான் மத்திய நிதிக் குழு, மாநில அரசுகளுக்கான ஒட்டுமொத்தக் கடன் வரம்பை நிர்ணயம் செய்கிறது. இதன்படி, தமிழ்நாட்டிற்கு மத்திய நிதிக் குழு நிர்ணயித்துள்ள கடன் வரம்பு, 2013–2014 ஆம் ஆண்டிற்கு மாநில மொத்த உற்பத்தியில் கடன் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும் என்பதுதான். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பித்துள்ள விவரத்தின்படி 2013–2014-ஆம் ஆண்டு இறுதியில், இந்த சதவீதம், 19.18 அளவு மட்டுமே இருக்கும். மேலும், இவ்வாறு கடன் பெறும்போது அதனால் ஏற்படுகின்ற வட்டிச் சுமை ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள்கூட தெரிவித்தார்கள். ஆண்டுதோறும் உயர்ந்துவரும் உற்பத்தி, வரி வருவாயின் அடிப்படையில், பெறப்படும் கடன் அளவோ, அதனால் திரும்பச் செலுத்துகின்ற வட்டி அளவோ, ஒவ்வோர் ஆண்டும் உயர்வது தவிர்க்க இயலாத ஒன்று. ஆனால், வட்டி அளவு, மாநிலத்தின் வருவாயில் உள்ள சதவீதத்தில் உயர்ந்து வருகிறதா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வட்டிச் சுமை வருவாய் வரவில் 10 ஆண்டுகளுக்கு முன்பு 20.97 சதவீதமாக இருந்தது. 2013–2014-ஆம் ஆண்டில் இது 11.45 சதவீதமாகக் குறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கடந்த காலங்களை ஒப்பிடும்போது இந்தச் சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, இந்திய அளவில் குறைவான கடன் சதவீதம் உள்ள மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று என்பதையும், இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, மாநில அரசு பெற்றுள்ள கடன் சுமையும், செலுத்தப்படுகின்ற வட்டியும், கட்டுப்படுத்தப்பட்ட அளவோடுதான் உள்ளது என்றும், அதைத் திரும்பச் செலுத்தக்கூடிய வகையில் தமிழகத்தின் நிதிநிலை வலுவாகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் மேற்கு வங்க மாநிலம்போல நமது மாநிலமும் கடனை இரத்து செய்வதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அப்போது திருமதி விஜயதரணி அவர்கள், ‘மேற்கு வங்கம், பீகார் போல நமது மாநிலத்தையும் பின்தங்கிய மாநிலமாக அறிவிக்கக் கோரி உதவிகளைப் பெறலாம்’ என்று போகாத ஊருக்கு வழி சொல்கிறார். இது எவ்வாறு சாத்தியம் என்பதும் எனக்குத் தெரியவில்லை. ‘தமிழகத்திற்குத் தர வேண்டிய நிதியைக்கூட மத்திய அரசு தரவில்லையே’ என்பதுதான் எங்களது ஆதங்கம். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்குகின்ற வரி வருவாயின் பங்கோ, மத்திய திட்டங்களுக்கு வழங்கும் நிதி உதவியோ வேறு மாநிலங்களிலிருந்து நமக்குக் கிடைப்பதில்லை. நமது மாநிலத்தில் வசூலிக்கப்படும் மத்திய வரி வருவாயில் ஒரு பங்குதான் நமக்குக் கிடைக்கிறது. அதன் பெரும்பகுதி பிற மாநில மேம்பாட்டிற்கு மத்திய அரசு பயன்படுத்துகிறது. இதைப் பற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், தமிழகத்திற்கு உரிய நிதியையாவது அவர்கள் தர வேண்டாமா? அதைப் பெற்றுத் தர, இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் உதவி புரிவார்களா என்பதுதான் எங்களது கேள்வி. அவர் இப்போது இங்கு இல்லை. திருமதி விஜயதரணி அவர்கள் மேலும் ஒரு கருத்தைச் சொன்னார். சென்ற ஐந்தாண்டு கால திட்டத்திற்கு 32,000 கோடி ரூபாயையும், இந்த ஐந்தாண்டு கால திட்டத்திற்கு 85,000 கோடி ரூபாயையும் மத்திய அரசு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். இந்தப் புள்ளிவிவரங்களை எதனடிப்படையில் அவர் தெரிவித்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், உண்மையான புள்ளிவிவரங்களின்படி, ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான பெரும்பகுதி நிதி மாநில அரசினுடைய நிதியே என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 12–45

ஐந்தாண்டுத் திட்டம் என்பது ஆண்டுதோறும் எடுத்துச் செயல்படுத்த வேண்டிய திட்டம் சார்ந்த பணிகளுக்கான மொத்த வரைவுத் திட்டம்தான். இது ஒவ்வோர் ஆண்டும் ஆண்டுத் திட்டமாக (Annual Plan) ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும்.

12–வது ஐந்தாண்டுத் திட்டம் 2012–2013–ல் தொடங்கி 2016–2017 வரை ஐந்தாண்டுகள் செயல்படுத்தப்படும். இதற்கு மாநில அரசு நிர்ணயித்துள்ள இலக்கு 2.11 இலட்சம் கோடி ரூபாய். 2012–2013 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு 28,000 கோடி ரூபாயில் மத்திய அரசினுடைய பங்கு 3,473.48 கோடி ரூபாய் மட்டுமே என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். பாக்கி இருக்கிற தொகை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

எல்லாம் நம்முடைய மாநிலத்தினுடைய வரி வருவாயிலிருந்துதான் செலவழிக்கிறோம். அதேபோல், 2013—2014-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு 37,000 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த 37,000 கோடி ரூபாயில் மத்திய அரசினுடைய நிதி 3,636.18 கோடி ரூபாய் மட்டுமே. அதாவது 9.83 சதவீதமே மத்திய அரசினுடைய நிதி. நிகர நிதியை மாநில அரசு தனது வருவாயிலிருந்தும், மாநில அரசு பெறும் கடனிலிருந்தும்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உண்மை நிலை இவ்வாறு இருக்க, ஐந்தாண்டுகளுக்குரிய திட்டங்களுக்கு முழு நிதியையும் மத்திய அரசே வழங்குவதுபோல உண்மைக்கு மாறான ஒரு செய்தியை திருமதி விஜயதரணி அவர்கள் பதிவு செய்துள்ளார். இதே பிரச்சினை குறித்த தவறான கருத்தினை, கடந்த கூட்டத் தொடரின்போதும் திருமதி விஜயதரணி தெரிவித்தார். அப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தக்கதொரு விளக்கத்தினை அவருக்குத் தந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவு கூருகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த விளக்கத்தினைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், மீண்டும் தவறான கருத்தினைத் தெரிவித்துள்ளதால், அவருக்கு மீண்டும் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு—செலவுத் திட்ட அறிக்கை மீதான விவாதங்களில் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்கு எனது நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, மக்களுக்காகத்தான் திட்டமே தவிர, திட்டங்களுக்காக மக்கள் அல்ல என்ற கருத்தின் அடிப்படையில்தான் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உன்னத நோக்கத்தை உறுதியாக எட்டுவோம் என மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்,
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்,
ஆற்றம் நல் அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம், அல்லது இழிதகவு இல்லையே’



2013 மார்ச் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

என்று கம்பர் கண்ட கோசல நாட்டின் வளத்தை தமிழ்நாட்டில் உருவாக்க அயராது பாடுபட்டுவரும் தமிழ்நாட்டின் இணையற்ற முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அறத்தையே தனது தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுவதால், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு மேலும் மேலும் உயர்வையே அடையும் என்பதில் ஐயமில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையும் செயலும் ஒன்றுதான்; அது தமிழகத்தின் முன்னேற்றம். மாண்புமிகு அம்மா அவர்களின் பேச்சும், மூச்சும் ஒன்றுதான்; அது தமிழர்களின் வாழ்வு. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் விவசாயிகள் வீட்டில் விளக்கு எரிகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் நெசவாளிகள் நெஞ்சம் நிறைகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் மீனவர்களின் கண்ணீர் மறைந்து போகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் மாணவர்களின் மனம் குளிர்ந்து போகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் நெசவாளர்களின், தொழிலாளர்களின் துன்பம் தொலைந்து போகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் உழைப்பாளிகளின் வேதனை விலகிப் போகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் தீய சக்திகள் அழிக்கப்பட்டு, தெய்வ சக்தி வலுப்பெறுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் வேஷதாரிகள் ஒழிக்கப்பட்டு, தமிழர்களுக்கு முழு நிம்மதி கிடைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் தமிழருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் எல்லாம் தவறாமல் கிடைக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் தமிழகத்தின் உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வர் ஆகும்போதுதான் தமிழ்நாட்டில் அமைதி தவழ்கிறது; ஆனந்தம் நிலைக்கிறது; இன்றைக்குத் தமிழகம் அனுபவிக்கும் இந்த ஆனந்தத்தை, தமிழக மக்கள் மட்டுமே பெறுகின்ற இந்த அனுபவத்தை, இந்திய நாடு முழுமையும், இந்திய மக்கள் அனைவரும் (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றிட வேண்டும் என்பதே தமிழக மக்கள் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பும், விருப்பமும் ஆகும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 மார்ச் 28

பிற்பகல் 12—50

தமிழக மக்களின் இந்த எண்ணத்தை ஈடேற்றிட, கழகத் தொண்டர்களின் விருப்பத்தினை நிறைவேற்றிட, தமிழகத்தின் உரிமைகள் தலை நிமிர்ந்து காக்கப்பட, இந்திய ஒருமைப்பாடு என்றுமே செழித்தோங்க பாரத அரசை மாண்புமிகு அம்மா அவர்கள் வழிநடத்த வேண்டுமென்பது காலம் நமக்கு இடுகின்ற கட்டளை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கனவை நனவாக்க, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும், வெற்றிக்கனி பறித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களில் சமர்ப்பிக்க உறுதி ஏற்போம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் மூன்றாவது நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்தில் அளித்திடும் வாய்ப்பினை அளித்து, அதன் தொடர்ச்சியாக அதன்மீதான விவாதங்களுக்குப் பதிலுரை வழங்குகின்ற நல்வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது நன்றியைச் சமர்ப்பித்து எனது பதில் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையின்மீது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அனைவரும் ரசிக்கக்கூடிய முறையிலே பல்வேறு விவரங்களை இங்கே எடுத்து வழங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களுக்கு ஏற்கெனவே பல சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, அவர்கள் பயன்படுத்தக்கூடிய மீன்பிடிச் சாதனங்களுக்குத் தமிழ்நாட்டிலே மட்டும்தான் நீண்ட நாட்களாக வாட் வரி இருக்கிறது. அது அரசாங்கத்திற்கு மிகச் சிறிய வருமானம்தான். எனவே, அந்த வாட் வரியை அண்டை மாநிலங்களைப்போல தமிழ்நாட்டிலும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் 50 சதவீதத்திற்கு மேலே சாகுபடி இழப்பு ஏற்பட்டிருக்கிற விவசாயிகள் நிவாரணத் தொகை கிடைக்காமல் விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நிவாரணம்



2013 மார்ச் 28] [திரு. க. பாலகிருஷ்ணன்]

வழங்குவதோடு, விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நிவாரணத்தை அறிவிக்க வேண்டுமென்றும், சமூகத்திலே மிகப் பெரிய சட்டம்—ஒழுங்கு போன்ற பிரச்சினைகளுக்கு இடர்ப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டிருக்கிற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மதுக்கடை பார்களை மூடவேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறேன். அதையும் அரசு பரிசீலித்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வரவு—செலவுத் திட்டத்திற்கு பதிலுரை அளித்தவிதம் நல்ல இலக்கியக் கூட்டத்திலே கலந்துகொண்ட ஒரு உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. கவிதை நயத்தோடு அரசாங்கத்தினுடைய திட்டங்களை, சாதனைகளை, மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முதலில் பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் பேசுகிற நேரத்தில் சில கோரிக்கைகளை, கருத்துகளை முன்வைத்தோம். இன்றைக்கு தமிழகத்தின் கிராமப்புறங்களுக்கு நாங்கள் செல்கிற நேரத்தில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பசுமை வீடுகள் திட்டம் எங்குப் பார்த்தாலும் ஏழையெளிய மக்கள், சாதாரண உழைக்கிற மக்கள், வண்ணக் கலர் பூசிய அந்த அழகிய மிடுக்கான வீடுகளில் மகிழ்ச்சியோடு வாழ்வதைப் பார்க்கின்ற நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களும் பெருமைகொள்கிறோம், மகிழ்ச்சிகொள்கிறோம். சாதாரண கிராமப்புற ஏழையெளிய விவசாயத் தொழிலாளி தானும் காரை வீட்டில் இன்றைக்கு சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கிற காட்சி. ஆனால், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் என்பது அன்றைக்குப் பொருத்தமாக இருந்தது. இன்றைக்கு இயல்பாக ஏறி இருக்கிற விலைவாசி உயர்வு, கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தில் அந்தக் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டும் தொடர்ந்து

[திரு. சு. குணசேகரன்]

சிறப்பாக செய்து தர வேண்டுமென்று சொன்னால், அதற்குக் கொஞ்சம் கூடுதலான நிதியை ஒவ்வொரு வீட்டிற்கும் அளித்திட வேண்டும். அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உசிதமான கூடுதல் நிதியை அவர்களாக முன்வந்து அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வைத்த அந்தக் கோரிக்கைகள், ஒவ்வொரு துறைக்கும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பார்க்கப் பார்க்க, கேட்க, கேட்க இனித்துக்கொண்டே இருந்தது. எல்லாத் துறைகளும் வளர்ச்சியடைவது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், ஒன்றைமட்டும் சுட்டிக்காட்டத் தவறிவிட்டார். நான் பேசுகிற நேரத்தில் சுட்டிக்காட்டினேன், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி என்பது மக்களுக்கான பணிகளுக்குத்தான். அதுமட்டும் சீலிங் வைத்ததுபோல ரூ.470 கோடியில் நின்று கொண்டிருக்கிறது. மூன்றாவது முறையாக நிதிநிலை அறிக்கையை முன்வைத்திருக்கிற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இந்த மூன்றாவது நிதிநிலைக்கு ஆலோசனை வழங்கியிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு கண்டிப்பாக தொகுதி மேம்பாட்டு நிதியை மூன்று கோடியாக ஒதுக்கித் தருவார்கள் என்று நாங்களெல்லாம் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, அந்த நிதியையும் அவர்கள் கூடுதலாக ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டு, வறட்சி நிவாரணத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஏதாவது அறிவிக்க வேண்டும், ஒரு உதவித் தொகையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று Zero Hour–ல் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் எனது அனுமதி இல்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 1–4–2013 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 12–55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*





# 13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*46. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து (i) 16–12–2011-ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.வி(SC)/7–29 மற்றும் (ii) 17–2–2012 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.வி(SC)/7–30 மற்றும் (iii) தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து 17–2–2012–ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./DC/8–15–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*47. 2011–2012-ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*48. 2011–2012-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*49. 2011–2012-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*50. 2011–2012-ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை.*

*[1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*51. 2011–2012-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்*

– ஏதுமில்லை –